1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆவணி மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 33-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

மழைக்கோலம் அதிகமாகக் காணப்படுகின்றது. காற்றும் சௌகரியமாக வீசுகின்றது. எனினும் இடையிடையே வெயில் கடூரமாக எறித்துக்கொண்டுதான் இருக்கின்றது. அரிசி, காய்கறி ஆகியன மீளவும் விலையேறத் தொடங்கியிருக்கின்றன.

### குருமாரின் ஞானஒடுக்கம்

நமதுமேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் முதலாவது பிரிவான ஞானஒடுக்கம் சென்றபுதன் கிழமைகாலை முடிவாயிற்று. இரண்டாவதுபிரிவான ஞானஒடுக்கம் வருகிற புரட்டாசிமாதம் 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 21-ந் திகதி முடிவாகும்.

### மதுசாரமற்ற கள்

கள்ளிலுள்ள மஸ்துத்தன்மையை நீக்கி அதனைஉணவுச்சத்துள்ள ஓர் பானமாகத் தயாரிக்கும்விஷயமாய் ஆலோசனைகூறும்படி ஓர்யப்பானிய நிபுணரின் சேவையைப்பெற உள்நாட்டு மந்திரி காரியாலயம் எண்ணுகின்றது. உள்நாட்டுமந்திரியாரான திரு. ஏ. இரத்நாயக அவர்கள் தமதுமந்திரிகாரியாலயத்தின் பாராளுமன்ற ஆலோசனைக்கம்மிற்றியிலே இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

### புதியஎக்ஸ்பிறெஸ் றெயின்கள்

கொழும்புக்கும் – கண்டிக்கும், கொழும்புக்கும் – மாத்தறைக்கும், கொழும்புக்கும் – காங்கேசன் துறைக்குமிடையே புதியஎக்ஸ்பிறெஸ்றெயின்கள் இம்மாதம் 30-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமைமுதல் ஓடத்தொடங்கும். கொழும்பு – காங்கேசன் துறை எக்ஸ்பிறெஸ் அன்றுமாலை 9-15மணிக்குக் கோட்டைஸ்ரேஷனிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை 7-20மணிக்குக் காங்கேசன்துறை வந்துசேரும் காங்கேசன்துறை – கொழும்புஎக்ஸ்பிறெஸ் அன்றுமாலை 8-20மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை 6-50மணிக்குக் கோட்டைஸ்ரேஷன் போய்ச்சேரும்.

### றப்பர்பற்றிய எச்சரிக்கை

இலங்கையிலிருந்து றப்பர்ஏற்றிச்செல்லும் கப்பல்கள் செஞ்சீனாபோய்ச்சேராமல் தடுக்கப்படுமென்றும், அவசியமானால் அவற்றைத்தடுக்க ஆயுதபலம் உபயோகிக்கப் படுமென்றும் போர்மோசாதீவிலுள்ள தேசியசீன அரசாங்கம் எச்சரித்திருக்கின்றது. இலங்கை றப்பர் செஞ்சீனாவுக்குப் போவதாலே கம்யூனிஸ்தசீனாவின் இராணுவபலம் அதிகரிக்குமென்றும், அவ்வாறு போவதைத் தான் அனுமதிக்கமுடியாதென்றும், செஞ்சீனாவுக்கு றப்பர்போன்றவைகளை அனுப்பி வியாபாரஞ்செய்வது யுத்தசெயலாகுமென்றும் தேசியசீன அரசாங்கம் கூறுகின்றது.

### யாழ்விநோத காணிவல்

பலலடசம்ரூபாசெலவில் அமைக்கப்படவிருக்கின்ற யாழ்ப்பாணநூல்நிலைய நிதிக்கென்று இம்மாதம் 26-ந் திகதியாகிய இன்றுமுதல் அடுத்தபுரட்டாசி மாதம் 12-ந் திகதிவரையிலே யாழ்ப்பாண நகரசபைமண்டப மைதானத்தில் இந்தயாழ்விநோதகாணிவல் நடந்தேறவிருக்கிறது. இது விஷயமாய் அதிர்ஷ்டலாபச் சீட்டுஒன்றும் நடத்துகின்றார்கள். இந்தச்சீட்டு புரட்டாசி மாதம் 12-ந் திகதியாகிய காணிவல் முடிவுதினமன்று பிற்பகல் 8மணிக்கு இழுக்கப்படும். இந்தக் காணிவலிலே மின்சாரதீப அலங்காரம், பலவிதவிளையாட்டுகள், இன்னிசை விருந்துகள், இலவசபடக்காட்சிகள், நடனங்கள் ஆகியபலவற்றையும் கண்டுகளிக்கலாம்.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு சென்ற திங்கட்கிழமைகாலை ஆரம்பமாயிற்று. சங். எம் சி. சான்சொனி நீதியரசர்வந்து விசாரணை நடத்திவருகின்றார். இம்முறை விசாரணைக்கிருந்த பதினைஞ்சுவழக்குகளில் பதினைன்றும் கொலைவழக்குகளாகும். மல்லாகக்கொலை எத்தனவழக்கு முதலாவதாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதிலே அருணாசலம் செல்லத்துரைமுதலாம் ஐவர் சேர்ந்து சட்டவிரோதமாகக் கூட்டங்கூடிக் கொலைசெய்ய முயன்றார்களெனக் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கின்றார்கள்.

### கல்லூரி ஆரம்பம்

மத்தியகோடைகால விடுமுறை முடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி புரட்டாசிமாதம் 1-ந் திகதியாகிய வருகிற புதன்கிழமைகாலை மறுபடி ஆரம்பமாகும்.

### கைலஞ்சம் வாங்குகின்றாரா?

பாராளுமன்ற அங்கத்தவர்களிலொருவர் கைலஞ்சம் வாங்குகிறாரென்ற புகார்பற்றி அற்றோர்ணி – ஜெனறல் விசாரணைநடத்தி வருகின்றார். இந்தப் புகார் முந்தப்பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் இதுவிஷயத்தை அற்றோர்ணி – ஜெனறலிடமே விட்டிருக்கின்றார். விசாரணையும் இப்போது எவ்வளவோதூரம் நடைபெற்றுவிட்டதாகத் தெரியவருகிறது.

### வாழைகள் நடும் இயக்கம்

கொழும்புநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள வீட்டுத்தோட்டங்களில் வாழைகள்நடுவதை ஊக்கப்படுத்தும் நோக்கமாகக் கமத்தொழிற்பகுதி நவமாக ஓர்இயக்கத்தைத் தொடக்கியிருக்கின்றது. மின்னேரியாவிலிருந்து அங்குதருவிக்கப் பட்டிருக்கும் முதினமான 5,000 வாழைக்குட்டிகள் ஒவ்வோர் வீட்டுத்தோட்டத்துக்கும் ஐந்துவீதம் ஆயிரந்தோட்டங்களுக்கு முதலில்வழங்கப்படும். இந்த இயக்கத்தின்மூலம் எல்லாமாக 25,000 வாழைக்குட்டிகள் இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன. இந்தவாழைக்குட்டிகள் நோய்அணுகாத இனத்தைச்சேர்ந்தனவென்று சொல்லப்படுகிறது.

### அம்பாரையின் முதற்கோவில்

கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள பிரதான பட்டினமாகிய அம்பாரை வருகிறவருடம் ஓர் கத்தோலிக்கக் கோவிலைக் கொண்டிருக்கும். அர்ச். இஞ்ஞாசியார்பேரால் கட்டியெழுப்பப்படவிருக்கும் அக்கோவிலுக்குத் திரிகோணமலைமேற்றிராணியாரால் சமீபத்திலே ஒன்பது குருமார் துணைபுரிய அஸ்திபாரக்கல் நாட்டப்படலாயிற்று. அத்தருணம் ஆண்டவர் அவர்கள் பேசியபோது: அங்கு முதற்குடியேற்றக்காரர் வந்ததும் அவர்களின் ஞானவாழ்க்கைக்கு வேண்டியவற்றைச் செய்ததாகவும், இந்தத் திருவைபவத்திலே சகலசமயத்தவர்களும் ஐக்கியப்பட்டவர்களாய் அங்குசமுகமளித்திருப்பது தமக்குப் பெரிதும்சந்தோஷத்தைத் தருவதாகவும் கூறினின்றார். அவ்வேளை கல்லோயா நிரந்தரவாசமனேஜரான திரு. எம். எஸ். பெரேரு, எஞ்சினியர் திரு. எம். சி. ஏபிரகாம்ஸ் என்பவர்களும், ஓர்புத்தகுருவும், ஓர் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாரும், மற்றும்அநேகரும் சமுகமளித்திருந்தார்கள்.

### கோவிலை எரித்தவழக்கு

கழுத்துறையைச்சேர்ந்த மெத்தியாலமுல்லையிலே கத்தோலிக்கக்கோவில் ஒன்றைச் சமீபத்தில் தாக்கியதன்சம்பந்தமாய் நான்குபுத்தகுருமார்உட்பட 24 பேர் கழுத்துறை நீதிஸ்தலத்தில் வழக்குத்தொடரப் பட்டிருக்கிறார்கள். கட்டளைச்சட்டத்துக்குமாறாகக் கூட்டங்கூடினார்களென்றும், அத்துமீறி ஓர்கத்தோலிக்ககோயிலுள் பிரவேசித்தார்களென்றும், கோவிலுக்கு எரியூட்டியமையால் 3,411 ரூபா 50 சதம் பெறுமதியான சொத்துக்கு நஷ்டம் விளைத்தார்களென்றும் இவர்கள்மேல் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கிறது.

### இரும்புக்கோலால் சுட்டவன்

நீஎடுத்தபணத்தைக்கொண்டு என்ன செய்தாய் என்று செடோறிஸ் சில்வா என்பவன் தனதுமனைவியான மதுராவதியைக் கேட்டான். அதற்கு அவள் சொன்னமறுமொழி அவனுக்குக் கோபத்தைமூட்டிவிட்டது. அதனால் அவன் நெருப்பில்காய்ச்சிய ஓர்இரும்புக்கோல்கொண்டு அவளைமுகத்திலும், கைகளிலும், கால்களிலும் சுட்டுவிட்டான். அதனால் இரத்தினபுரிக்கோட்டிலே சென்றவெள்ளிக்கிழமை இவன் மீது வழக்குத்தொடரப்பட்டது. விசாரணையின்போது தான் குற்றவாளியென்று அவன் ஒப்புக்கொண்டான். மனைவியும் அப்போது மனம்இரங்கி அவனுக்கு மன்னிப்பு அருளினாள். அப்போது நீதிபதி அவனைநோக்கி, மனைவியை ஆடுமாடுகளைப்போல் நடத்தப்படாது; நீ குற்றவாளியென்று ஒப்புக்கொண்டமையால் அதிர்ஷ்டசாலியானாய்; இந்தவழக்கை விசாரணை செய்திருந்தால் உன்னை மறியலுக்கு அனுப்பப் பின்வாங்கியிருக்க மாட்டேன் என்றுகூறி, இரண்டுவருடகாலத்திற்கு 100 ரூபா நன்னடத்தையில் செல்லும்படியும், முடிக்குரியசெலவாக 25 ரூபா கொடுக்கும்படியும் தண்டனை விதித்தார்.

### திரிகோணமலை மேற்றிராணியார்

திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவண. இக்னேஷஸ் க்ளென்னி ஆண்டவர் வட, தென் அமெரிக்காவுக்கும், பின்னர் பாப்பரசரின் வழமையான பேட்டிக்கென றோமாபுரிக்கும் வருகிற புரட்டாசிமாதம் 1-ந்திகதி இரத்மலானையிலே விமானமொன்றில் பிரயாணமாகவிருக்கின்றார். அடுத்த 3-ந்திகதி அவர் அமெரிக்கஐக்கியதேசம் போய்ச்சேருவார்.

### இலங்கை–எகிப்து வர்த்தகம்

இலங்கைக்கும், எகிப்துக்குமிடையே புதியவர்த்தகஉடன்படிக்கைஒன்று நிறைவேறவிருக்கிறது. இந்த உடன்படிக்கையாலே எகிப்துக்கு இலங்கைத் தேயிலையின் ஏற்றுமதிவிலக்கு நீக்கப்படுவதோடு, எகிப்துக்கு மற்றும் இலங்கை விளைபொருட்களை இட்டம்போல ஏற்றுமதிசெய்யவும் அனுமதிக்கப்படவிருக்கிறது. புதியஉடன்படிக்கைப்படி, வருடமொன்றுக்கு 6 கோடிமுதல் 8 கோடிரூபாவரை பெறுமதியுள்ள தேயிலை, தேங்காய்எண்ணெய், தேங்காய்ப்பூ, றப்பர், கொக்கோவாதியாம் இலங்கை விளை பொருட்களை எகிப்து வாங்கிக்கொள்ளும். அவற்றிற்குப்பதில் கூடியதொகையாக 2 கோடி ரூபாபெறுமதியான பஞ்சு, பஞ்சுநூல், புடவை, உருளைக்கிழங்கு, வெங்காயம், சீமேந்துமுதலாம் எகிப்திய விளைபொருட்களை இலங்கைவாங்கிக்கொள்ளும்.

### மன்னாரும் பனைவெல்லமும்

தலைமன்னார், தோட்டவெளி ஆகும் இடங்களிலே பனைவெல்லம் உற்பத்திசெய்யும் இரு தொழிற்சாலைகளை அமைத்து, அவற்றின்மூலம் அப்பகுதி மக்களுக்கு நல்லவருமானம் தரத்தக்க வழிவகைகளைச்செய்யப் பனம்பொருள் நிபுணரான திரு. ஏ. டி. காசிஅவர்கள் எண்ணியிருக்கிறார். சென்றவாரமுதல் மற்றுஞ்சிலருடன் மன்னார்ப்பகுதியிலே பனைகள்செறிந்துள்ளபலவிடங்களையும் சுற்றிப்பார்வையிட்ட இவர் அப்பகுதியிலுள்ள பெருந்தொகையான பனைமரங்களிலிருந்து தும்புசேகரித்து அதனையும், பனைஈக்கில்களையும் பிறநாடுகளுக்குப் பெருந்தொகையாக ஏற்றுமதிசெய்யலாமெனத் தெரிவித்திருக்கின்றார். மன்னார்ப் பகுதியிலே பனைவெல்லஉற்பத்தியை விருத்திசெய்வதற்காக நாற்பது இந்தியதொழிலாளர்களை அங்குதருவிக்க அனுமதிகோரி இலங்கைஅரசாங்கத்துக்கு இவர்மனுப்பண்ணுவாரெனத் தெரியவருகிறது.

### தீவிரமாகப்பெருகும் மீன்கள்

உறுகுணைப்பகுதியிலுள்ள நீர்ப்பாசனகுளங்களில் நீர்ப்பாசனபகுதி அதிகாரிகள் இற்றைக்கு ஓர்மாதத்தின்முன் அதிதீவிரமாய்ப் பலுகிப்பெருகும் இனத்தைச்சேர்ந்த "ஐப்பான் கொறுவி" என்றமீன்களைக்கொண்டு போய் விட்டார்கள். இந்தமீன்கள்ஒரு மாதகாலத்துள் பெருந்தொகையாகப் பலுகிப்பெருக்கமடைந்து இப்போது ஒவ்வொன்றும் ஒருஅடிநீளமுடையனவாகிவிட்டனவாம். இது மீன்வரத்தில்லாத அப்பகுதிமக்களுக்கு மிகவாய்ப் பாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற குடும்பத்தின் தேசுற்ற பாலியர்

( தமிழாக்கம்: பி. இராசையா, காவலூர் )

(சென்றவாரத் தொடர்ச்சி)

அன்று தோமினிக் சவியோ ஒரு சாதாரண பள்ளிச்சிறுவனாய் இருந்தார். ஆனால், இன்று அவர் ஒரு அசாதாரண மாணவ அர்ச்சியசிட்டர் ஆகிவிட்டார். அவரது எளியசாதனை எவ்வித மாணவனும் பின்பற்றக்கூடிய உதாரணமாக விளங்குகின்றது. அவரைப் பின்பற்றுவதற்குத் துறவுபூண்டு, கடுந்தபம்புரிய வேண்டியதில்லை. அவர் செய்த தபமுயற்சிகள் எவ்வித மாணவனும் தன்வாழ்வில் அனுட்டிக்க வேண்டியனவே. ஆகவே, அதனாற்பலன் அடையவேண்டின் அவர் எப்படி அந்தத்தபமுயற்சிகளை ஆனந்தமாய் வரவேற்று ஆலிங்கனம்செய்தாரோ, எவ்வாறு முட்களாகிய தபமுயற்சிகளை அமலனின் முன்னே புண்ணியப்பலன்களாகிய அன்றலர்ந்தரோசாப்புஷ்பங்களாக மாற்றினாரோ அப்படியே ஒவ்வொருமாணவனும் செய்யவேண்டும். அப்பொழுது அமலபதம் அடைந்து அர்ச்சியசிட்டர்களாய் வாழலாம்.

அர்ச்சியசிட்டபட்டம் அளிப்பதற்கென அநேகரின் சீவியசரிதைகள் திருச்சபையின்பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவர்கள் ஒவ்வொருவரினதும் சீவியசரிதையைத் தீர ஆராய்வதில் திருச்சபை கணக்கற்றவருடங்களைக் கழிக்கின்றது. இவ்வித காலதாமதமின்றி ஆராய்ந்து திருச்சபை தகுந்தோர்க்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டியிருக்குமெனில் தோமினிக்கின் சாதனையால் உந்தப்பட்டு அர்ச்சியசிட்டர்களான வேறும்பலமாணவ அர்ச்சியசிட்டர்களை இன்றுநாம் பெற்றிருப்போம்.

தோமினிக் சவியோ ஓர் தேவதொண்டராகத் திருச்சபையால் பிரகடனம்செய்யப்பட்டார். அவர் இன்று ஓர்மாணவ தேவதொண்டராக மிளிர்கின்றார். கட்டாயக்கல்வி நடைமுறையில்இருந்துவரும் இந்நாளில் கணக்கற்றமாணவர்கள் அர்ச்சியசிட்டரான தோமினிக் சவியோவைப் புத்தகங்கள், படங்கள், பிரசங்கங்கள் மூலமாய் அறிந்துகொள்ள அமலன் அருள்புரிவாராக. தோமினிக் சவியோவின் சரிதையை நாங்கள் அறிவதின்பயன், அவரது சிறந்த மாணவப்பண்பையும், நேர்மையான நெறியையும் கடைப்பிடித்து அவர் அடைந்த மோட்சகதியை நாங்களும் அடைதலேயாம்.

நிற்க, இற்றைக்குத் தொண்ணூற்றேழு ஆண்டுகளுக்குமுன் மாரிகாலத்திலே தூறின் நகரில் ஓர்நாள் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. வானத்தில் செறிந்திருந்த கார்முகில்கள் இடையிடையே துந்துமிபோட்டுக் கொண்டிருந்தன. வீதிவழியேவந்த ஓர்வண்டி அங்கு வீதிஓரத்திலிருந்த ஓர்மடத்தின்முன் நின்றது. அதனை அந்தமடத்தில் வாழ்ந்த சிறுவர்கண்டனர். அதன்பின்னால் வந்துகுழுமினர். பதினைந்துவயது நிரம்பாத மனோகரத் தோற்றமுடைய இளைஞன் ஒருவன் அந்தவண்டியில் ஏறினான். வண்டியில் ஏறிய அந்தஇளைஞன் அங்குகுழுமியிருந்த சிறுவர்களுக்குப் பிரியாவிடை கூறப் பின்புறமாகத்திரும்பினான்.

“தோமினிக்! சிலநாட்களுள் திரும்பிவிடு” என்றான்—தனதுதைரியத்தை வரவழைத்துக்கொண்டு ஓர் இளைஞன்.

“கெதியிற் சுகமடைந்து எப்போதும்போல எங்களுடன் படிப்பிலும், விளையாட்டிலும் கலந்துகொள்ளச் சீக்கிரம் வந்துவிடு” என்றான் மற்றொரு இளைஞன்.

அந்தச்சிறுவர்களின்மத்தியில் தொன்பொஸ்கோ காணப்பட்டார். அவர்தான் அவர்களின் ஞானத்தந்தை, நண்பன், ஞானவழிகாட்டி. அவர் தம்மைப்பிரிந்துசெல்லும் அந்தஇளைஞனை அங்கலாய்ப்புடன் நோக்கினார். அவருடையபார்வையில் துக்கம்கலந்த தயாளம்தென்பட்டது. ஆன்றமைந்த ஞான அமைதியுடன் அவர்விளங்கினார். அந்தஇளைஞன் வண்டியிலுள்ள ஆசனத்தில் அமர்ந்தான். ஆர்வம்மிகுந்து அரும்பும் புன்னகையுடன் அங்கு குழுமிநின்றோரைச் சுற்றிவாநோக்கினான். யாவர்க்கும்பிரியாவிடைகூறிய பின்: “இனிமேல்நான் இங்குதிரும்பி வருவதற்கில்லை” என்று தெளிவாகக் கூறினான். அக்கூற்றின்உண்மையை யாவரும் உணர்ந்தார்களா? அதன் உண்மையை உணர்ந்துகொள்ள அவர்கள்யாவரும் தீர்க்கதரிசிகளா, என்ன? அந்தஇளைஞன் உண்மையைஉணர்ந்தே கூறியவன்போல் காணப்பட்டான். ஆனால், அவனது ஞானத்தந்தை முற்றும்உணர்ந்த முனிவராய்க் காட்சியளித்தார்.

கிழமைகள் உருண்டோடின. இத்தாலியின்வடபகுதியிலே பியெட்மண்ட் மாகாணம்உள்ளது. அங்கு மொண்டோனியோ என்ற ஓர்குக்கிராமம் உண்டு. அந்தக் கிராமத்துக்குச் சென்ற அந்தஇளைஞன் தனதுஎளிய குடிசையில் 1857-ம்ஆண்டு பங்குனி மாதம் 9-ந் திகதி இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினான்.

ஆனால், இது அவனுடைய உலக சீவியத்தின் முடிவாயிருக்கவில்லை, அவனது உடன்மாணவரின் இதயங்களில் அவன் இறவாதுவாழ்ந்தான். அவனுடைய முன்மாதிரிகையும், நன்மொழிகளும் அவர்களை உந்தவழியில் ஊக்கின. அவனதுபண்பட்ட வாழ்க்கை முறையை அவனுடைய ஆசிரியருள் சிலர்தானும் பின்பற்றினர். இவர்களெல்லாம் இன்று இவ்வுலகில்இல்லை. ஆனால், அந்தஇளைஞனைப்போல இவர்கள் தங்களையும் பரமனதுநம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக்கிக் கொண்டார்கள். அதனால் இவர்களும் இன்று பரலோகத்தில் வாழ்கின்றனர்எனலாம்.

பரலோக திருத்தொண்டர்களின் பட்டியலிற் சேர்க்கப்பட்ட அந்தப் பாடசாலைச்சிறுவன் இன்றும் எம்மிடையே வாழ்கிறான். தோமினிக் சவியோ இறந்ததும் அவனது சீவிய சரிதத்தைத் தொன்பொஸ்கோவே எழுதி வெளியிட்டார். அந்தச் சிறு புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள். அவன் சீவிப்பதைக் காண்பீர்கள். அவனது உயிர்த்துடிப்பை உணர்வீர்கள். இச்சீவியசரிதையால் உந்தப்பட்டுத் தங்கள் வாழ்க்கையை அவனதுசீரிய சீவியமுறையிற் சீர்ப்படுத்த முனைந்துநிற்போர் பலர். கிறீஸ்தவவைராக்கிய ஒழுக்கநெறியுடையோராய்த் தங்களை ஆக்கிக்கொள்ள அயராது செயலாற்றுவோர் அனந்தம்.

(தொடரும்)

---

● பரிசுத்தஸ்தானத்துக்கும், தொமினிக்கன் குடியரசுக்குமிடையில் நடைபெற்றிருக்கும் புதியஉடன்படிக்கையிலே மேற்றிராணிமாரைத் தெரிவுசெய்வதில் இதுவரை அரசாங்கத்துக்கு இருந்துவந்தஉரிமை நீக்கப்பட்டுள்ளது. ஆனால், பரிசுத்தஸ்தானம் ஒருவரை மேற்றிராணியாராகத் தெரிவுசெய்தபின் அவரையிட்டு அரசியற்றடை யாதுமுண்டோ என்பதைஅறிந்துகொள்ளுமாறு அவர்பெயரை அரசாங்கத்துக்குத் தெரிவிக்கும்.



# பல தேசங்களில்

## அதிசய ஐந்துபிள்ளைகள்

ஒரேபிரசவத்தில் பிறந்த ஐந்துபிள்ளைகள் தற்போது எங்கேஇருக்கின்றார்கள். தென்னமெரிக்காவைச் சேர்ந்த ஆர்ஜென்ரீனநாட்டின் தலைப்பட்டணமாகிய புவெனோஸ் அயேர்ஸ்நகரில் இருக்கின்றார்கள். டிலிஜென்ரிதம்பதிகளின் பிள்ளைகளான இந்த ஐவரும் சென்றஆடிமாதம் 15-ந் திகதியன்று தங்களின் பதினோராவதுவருட பிறந்த பெருநாளைக் கொண்டாடினார்கள் இவர்களில் முதற்பிள்ளையும், கடைசிப்பிள்ளையும் ஆணகள். இவர்களின் நாமங்கள் முறையே — பிரூங்கோ, மரிய கிறிஸ்ரினா, மரிய பெர்னாண்டோ, மரிய எஸ்ரர், கார்லோஸ் என்பன. வேறுவேறு பாடசாலைகளில் படிக்கவிடப்பட்டிருக்குங் காரணமாக இவர்கள் மிகஅரிதாகவே ஒருங்கு காணப்படுகின்றார்கள். கனடாதேச காலண்டர்எனுமிடத்திலே இற்றைக்கு 20 வருடங்களின்முன் ஒரேபிரசவத்தில் பிறந்து உலகப்பிரசித்தி பெற்றிருந்த டையோன்னே தம்பதிகளின் ஐந்து பெண்பிள்ளைகளிலும் எமிலி எனும் பெண்பிள்ளை இம்மாதம் 6-ந் திகதி குவெபெக்நகரைச்சேர்ந்த ஆகதேஎனுமிடத்தில் இறந்துபோனசெய்தி யாவரும் அறிந்ததே.

## கிறீஸ்துநாதரின் சரிதைப்படம்

திரு. டாறில் ஸானக்என்ற சினிமாத்தொழிற்தலைவர் வேதாகமசரித்திர சினிமாப்படம்ஒன்றைத் தயாரிப்பதில் தற்போது தீவிரமாக ஈடுபட்டுவருகின்றார். 50 லட்சம் டலர்செலவிலே தயாரிக்கப்படவிருக்கும் இந்தப்படம் அவர் இதுவரைபிடித்துள்ள சினிமாப்படங்களிலெல்லாம் மிகப்பெரியதாய் இருக்கும். இது கிறீஸ்துநாதரின் சீவியசரித்திரத்தைக் காண்பிக்கும்படமாகும். புல்ரன் அவேர்ஸ்லர் என்பவரால் எழுதப்பெற்றதும், உலகமுழுவதும் மிகநன்றாக விலைப்பட்டுவருவதுமான ஓர்நூலையே—அதாவது “எக்காலத்திலாவது சொல்லப்பட்ட மகாப்பெரிய சரித்திரம்” எனும் நூலையே ஆதாரமாகக்கொண்டு இந்தப்படம் பிடிக்கப்படவிருக்கிறது. அந்தநூலின்பெயரையே இந்தச்சினிமாப்படமும் கொண்டிருக்கும். இதுசம்பந்தமாய்த் திரு. ஸானக் அவர்கள் ஜெருசலேமிலும், நசரேத்திலும், பரிசுத்தநாட்டின் மறுபகுதிகளிலும் சமீபத்திலே பரக்கச்சுற்றுப்பிரயாணம் நடத்திவருகின்றார். இவற்றிலேசில தற்போது யோர்தான்நாட்டிலும், ஏனையவைகள் இசிறவேல்நாட்டிலும் இருந்துவருகின்றன. கிறீஸ்துநாதர் சஞ்சரித்த — போதகஞ்செய்த — திருத்தொண்டாற்றிய அந்தந்த இடங்களிலிருந்தே இந்தப்படம் பிடிக்கப்படும். நிகழும் 20-ம் நூற்றாண்டிலே வேதாகமசரித்திரம்ஒன்றை உண்மையான இயல்பிலேயே இயன்றமட்டும் எடுத்துக் காட்டவேண்டுமென அவர் ஆசிக்கின்றார்.

## செலவிற்கூடிய சினிமாப்படம்

சினிமாப்படங்களின் முழுச்சரித்திரத்திலும் மிகப்பெரியதும, செலவில் மிகக்கூடியதுமான சினிமாப்படம் ஒன்று இப்போது தயாரிக்கப்பட்டுவருகிறது. “வெற்றியாளன்” என்றநாமமுடைய இப்படத்தைத் தயாரித்துவருகிறவர் திரு. ஹோவாட் ஹியூஸ் எனப்பெயரிய கோடீசுரரே. தற்போது இந்தப்படத்தில் அரைவாசியே பூர்த்தியாகியிருக்கிறது. வருகிற தை மாசத்தில்தான் இது திரையில் விடப்படவிருக்கிறது. அதற்சமுன எல்லாமாக இதற்கென்று ஏற்படவிருக்கும் செலவுமதிப்பு குறைந்தபட்சம் 1கோடியே 20லட்சம் டலராகும். இதனை விளம்பரப்படுத்துவதற்கு மாத்திரம் அவர் 20லட்சம்டலர் செலவிடத்திட்டஞ்செய்திருக்கிறார். படம்பிடிக்க மாத்திரம் ஏற்படவிருக்குஞ் செலவு பணம் 60லட்சம பவுணுதும. ஜோண் வேயின், சூசன் ஹேவாட், பீட்ரோ ஆர்மென்டாறிஸ்என்ற பிரபலநடிகர்கள் இதில் பாத்திரங்களாக இருக்கின்றார்கள்.

## இத்தாலிய மாஜி பிரதமர்

1946-ம ஆண்டுமுதல் 1953-ம் ஆண்டுவரை தொடர்ந்து இத்தாலிய பிரதமராக விளங்கியிருந்தவரும், முற்றாக ஓர் கம்யூனிஸ்த நாடாகும ஆபத்திலிருந்து இத்தாலியைக் காத்து வைத்தவருமான சிஞ்ஞோர்அல்சிதே தே காஸ்பெறிஅவர்கள் சென்றவெள்ளிக்கிழமை தமது 73-ம் வயதிலே எதிர்பாராத விதமாகக் காலஞ்செல்லலாயினரென ரோமை நகரிலிருந்து செய்திவரலாயிற்று. ஐரோப்பியநாடுகளின் ஐக்கியத்தையும், ஐரோப்பிய பாதுகாப்புஉடன்படிக்கையையும்மிக்க ஆர்வத்துடன் ஆதரித்துநின்றவர்களில் ஒருவரும், 1948-ம்ஆண்டின் அபாயகரமான இத்தாலிய பொதுத்தேர்தலிலே கம்யூனிஸ்தர்களின் எதிர்ப்பை மேற்கொண்டு சிறந்தவெற்றி ஈட்டியதன்மேல் மேற்கு ஐரோப்பியநாடுகளின் முகாமுக்குச் சத்திகரமாக இத்தாலியை வழிநடத்திய கத்தோலிக்கபெரிய இராசதந்திரியுமான இவரின் நாமமும் இத்தாலியின் சரித்திரத்தில் நிலைபெறக்கூடியதே.

---

● இந்தியாவிரைவிலே தனதுசொந்தயுத்தக்கப்பல்களைக் கட்டுமெனறியர்-அட்மிறல் எவ். ஏ. பலன்ஸ் தெரிவிக்கின்றார். இந்தியா தற்போது பதினாயிரம்தொன் நிறைகொண்ட வியாபாரக் கப்பல்களைக் கட்டிவருகிறதென்றும், விரைவிலே அது தனதுசொந்தயுத்தக் கப்பல்களையும் கட்டுமென்றும் அவர் கூறுகின்றார்.

● “வனாந்தரத்தின் பறக்குஞ்சுவாமியார்” என்று வண. ஆர்மெல்எனும் குருவானவர் அழைக்கப்பட்டு வருகின்றார். முன்னே இவர் பிரித்தானிய ரோயல்விமானப்படையில் ஓர்விமானியாக இருந்தவர். தற்போதுஇவர் சகாரா வனாந்தரத்தில் தூரமானஓயசிஸ்என்ற செழித்தஇடங்களைத் தரிசிப்பதற்கெனச் சிறியசுற்றுப்பிரயாண விமானம் ஒன்றை உபயோகித்து வருகின்றார்.

● 1940-ம் ஆண்டு இங்கிலாந்திலே கினேட்எனுமிடத்திற்கப்பால் வெடிவிபத்துக்குள்ளாய்க் கடலில் ஆழ்ந்த மெயிலி பிறெஸிஎனும் 2,441 தொன் நிறைகொண்ட பிரான்சிய டிஸ்திரோயர்க்கப்பல் சமீபத்திலே மிதத்தியெடுக்கப்படலாயிற்று. 10 அடிச்சேற்றில் புதைந்திருந்த இந்தக்கப்பலில் 1,000 தொன்சேறு அடைந்திருந்ததாம்.

● பிரித்தானியஅரசு சப்தத்திலும் கூடியவேகத்திலே பறந்துசெல்லக்கூடிய தனது முதற் போர்விமானத்தைக் கட்டிமுடித்துப் பொஸ்கோம்டவுண் எனுமிடத்திலே பறக்கவிட்டுப் பரிசோதனைசெய்து வெற்றிகண்டிருக்கிறது. இதன்நாமம் ‘பி. ஐ.’ என்பது. இது சப்தத்திலும்வேகமாய்ப் பறப்பதுடன் சத்துருவிமானத்தைக் குறுக்கிட்டு எதிர்த்துப்போராடவும் கூடியதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சதாசகாய மாதாகோவில்

அயர்லாந்திலே ஸ்ரேன் எனுமிடத்தில் அர்ச். சதாசகாயமாதா பேரால் கட்டியெழுப்பப்பெற்ற புதிய கோவில்ஒன்று சென்ற ஆடிமாதம 24-ந் திகதியன்று கெறிநகர மோய்னிகன் மேற்றிராணியாரால் ஆசீர்வதிக்கப் படலாயிற்று. தமது பெயர் வெளிவராது மாதாபக்தர் ஒருவர் நன்கொடையாகஉபகரித்த 20,000 பவுணைக்கொண்டே இப் புதியகோவில் கட்டப்பட்டது ஆனல், இந்தஉபகாரி அக்கோவில் கட்டப்பட்டிருக்கும் இடத்துக்கு அயலிலுள்ள ஓர்கிராமத்தில் ஓர்காலம் ஏழையாகக் கைவிடப்பட்டு, ஆதரவற்றிருந்து பிந்த அமெரிக்கஐக்கியதேசஞ் சென்று அங்கு மால்டன் எனுமிடத்தில் குடியேறித் தனது அயராஉழைப்பினல் செல்வந்தராயினர்.

### மூன்றுசகோதரரின் முதற்பூசை

தங்களுடைய ஒன்பதுபிள்ளைகளில் ஏழுபேரைக் குருமாராகவும், கன்னியாஸ்திரீமாராகவும் காணப்பாக்கியம்பெற்ற ஓர் தந்தையும், தாயும் சமீபத்தில் புதிதாக ஒருங்கே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற தங்கள் கடைசிப்புதல்வர்கள் மூவரும் ஸ்பானியதேச சான்ரான்டர் நகரிலுள்ள தொமிலியாஸ் சர்வகலாசாலைச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய முதற்பூசைகளின்போது சமுகமாயிருந்தார்கள். தந்தையார் ஸ்பானிய பாராளுமன்றத்தின் முன்னள் அங்கத்தவரான சென்செஞேர் லமமி டே கிளேராக் அவர்கள். இவர் நோயாளரின் ஆசனம்ஒன்றில்வைத்துக் கோவிலுக்குத் தள்ளிக்கொண்டு போகப்பட்டார். இவர்களுடையபிள்ளைகளில் மூத்தவர் ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்தின்போது, ஓர்பட்டாள விசாரணைக்குரவராயிருந்து மதிரித் போர்முனையில் நடைபெற்றயுத்தத்தில் இறந்துபோயினர்.

### மரியமதலேனளின் சினிமா

பெரும் பாவியாயிருந்து பச்சாத்தாபப்பட்டு மனந்திரும்பி அர்ச்சியசிஷ்டவளான மரியமதலேனளைப்பற்றிய வேதாகம சரித்திரத்தை வர்ணித்துக் காட்டவிருக்கும் ஓர் சினிமாப் படத்திலே அவளுக்காக நடிக்கக்கூடிய ஓர்பெண்மணியைத் தேடிக்கண்டடையுமாறு ஹொலிவூட்டின் திறமைமிக்க மேதாவிகள்சிலர் சமீபத்திலே இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றனர். இந்தச்சினிமாப்படத்திலே திறம்பட நடிக்கக்கூடிய ஓர்தகுந்தபெண்மணி தற்போது அகிலமுழுவதுமே தேடப்பட்டுவருகின்றுள். "கலிலேயர்கள்" என்று அழைக்கப் படவிருக்கும் இந்தச்சினிமாப் படம் திரு. பிறுங் சிலோட்டர் அவர்கள் எழுதியுள்ள வேதாகம கற்பனைகதையை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட விருக்கிறது. இதனைத் தயாரிக்கும் கோஷ்டியின் உபதலைவரான திரு. எட்வாட் மல் அவர்கள் இதுவிஷயமாகப் பத்திரிகைகளுக்கு விடுத்தசெய்தியிலே, "மரியமதலேனள் பச்சாத்தாபத்தின்சின்னமாக விளங்குகின்றுள்; அதனல் அவளிடமாகநடிக்கத் தெரியப்படும் பெண்மணி அழகியாயிருப்பது மாத்திரம்போதாது; ஆனல். ஒன்றுக்கொன்று முரண்பட்ட ஆசாபாசத்தீயையும், பரிசுத்தத்தின் ஞானத்தீயையும் மற்றவர்களிடையே எழுப்பக்கூடியவளாயும் இருத்தல்வேண்டும்" எனக் கூறியிருக்கின்றார்.

### செஞ்சீனவும் மிஷனரிமாரும்

ஒருகுருப் பிரசாதியையும், ஆறு கன்னியாஸ்திரி மாரையும், வேறு 37 அகதிகளையும் கம்யூனிஸ்தசீனவிலிருந்து சமீபததில எஸ். எஸ். ஹியூனன் எனும் பிரித்தானிய கப்பல் ஹொங் கோங் தீவு கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறது. தற்போது செஞ்சீனவில்எஞ்சியிருக்கும்129 கத்தோலிக்க மிஷனரிமாருள் 3 மேற்றிராணிமாரும், 20 குருமாரும் சிறைச்சாலைகளில் இருந்துவருகிறூர்கள். அங்கு கம்யூனிஸ்தஆட்சிக்குமுன் 5,000 கத்தோலிக்க மிஷனரிமாருக்கு மேல் இருந்தார்கள். 2,000 சீனக் குருமாருள்ளும் அநேகர் சிறை

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

வாசஞ்செய்துவர, வேறுஅநேகர் மறைவாயிருந்துவர, வேறு அநேகம்பேர் நாடுகடத்தப் பெற்றுள்ளார்கள். ஒருசிலர் கண்டிப்பான கட்டுப்பாடுகளுடன் தங்கள் திருத்தொண்டைத் தொடர்ந்து ஆற்றிவருகிறூர்கள். 1940-ம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டின் இறுதிவரை சுமார் 199 கத்தோலிக்க மிஷனரிமாரும், சாதாரணகத்தோலிக்கரும் சீனவில் உயிரிழந்திருக்கிறூர்கள்.

### பாலியவயதின் ஞாபகம்

வெறுங்காலுடன் நிற்கும் ஓர் பாலியராக — அதாவது தமது சப்பாத்துகளும், பாடசாலைப் புத்தகங்களும் தோள்களில்மாட்டப்பட்டுத் தொங்கியவண்ணமாக நிற்கும் ஓர்பாலியராக அர்ச். பத்தாம் பத்திநாதரைக் காண்பிக்கும் வெண்கலச்சுரூபம் ஒன்று அவர்பிறந்த றீயெஸி கிராமத்திலிருந்து காஸ்ரெல் பிறூன்கோவுக்கும் செல்லும் பாதையருகே ஓர்சிறுபுல்நிலத்தில் நிறுவப்பட விருக்கிறது. வருங்கால பாப்பானவராகிய அவர் ஓர்பாலியராக இருந்த போது, பாடசாலைக்குப் போகவும், வரவுமாக இந்தப்பாதை நீளம் தினமும் இருமுறை நடந்திருக்கிறார். பாடசாலையிலும், அதன்சூழலிலும் இருக்கும் பேரி[illegible]

களை அணிந்துவந்தார். சிவிய பருமனுள்ள இந்தவெண்கலச் சுரூபம் நிறுவப்படவேண்டுமென்று ஆலோசனைகூறியவர் றீயெஸிபட்டினத்தின் மேயரே. இந்தச்சுரூபத்திற்கென இத்தாலிமுழுவதிலுமுள்ள பாடசாலைப்பிள்ளைகள் பணமுபகரித்து வருகிறூர்கள்.

### கம்யூனிஸ்த செபப்புத்தகம்

போலாந்திலே திரும்பவும் ஞானேபதேசப் புத்தகங்களும், செபப் புத்தகங்களும் அச்சேற்றப்பட்டுவருகின்றன.. ஆனல், அவைகள் திருச்சபை அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றனவன்று. கம்யூனிஸ்த அரசாங்கத்தின் எதேச்சாதிகாரத்துடனேயே அவைகள்வெளிவருகின்றன. கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள அச்சகஸ்தாபனங்களுள் ஒன்றாலே பிரசுரஞ்செய்யப் பெற்ற செபப் புத்தகங்களின் தொகையை வார்சோநகர வானெலி சமீபத்தில் அறிவித்திருக்கின்றது. ஆனல், இந்தப்புத்தகங்களெல்லாம் அங்கு கம்யூனிஸ்த அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுள்அடங்கியுள்ள "தேசீய 'திரு'ச்சபை" யின் ஆதரவையே பெற்றுள்ளன. அவைகள் பெறும் ஒரேயொருஅங்கீகாரம் அரசாங்கத்தால்நியமிக்கப்பட்ட போலி "விக்கார் ஜெனறல்க" ளிடமிருந்துதான். ஒவ்வோர் செபப்புத்தகமும் "மக்கள்குடியரசுக்காக" ஓர் செபத்தையும் அடக்கியுள்ளது. என்னவினேதம்? கம்யூனிஸ்த அரசாங்கத்துக்காகவும் செபமா?

### கன்னியாஸ்திரியாகவிருந்தாள்

கனடாதேசத்திலே காலன்டர்எனுமிடத்தில் ஒரேபிரசவத்தில்பிறந்து இருபது ஆண்டுகளாக உயிர்வாழ்ந்திருந்த ஐந்து பிள்ளைகளிலும் எமிலி எனும் பெண்மணி இம்மாதம் 6-ந்திகதியன்று மரணமடைந்தபோது உலகமுழுவதிலுமிருந்தே அனுதாபந்தெரிவித்து கிமிஷந்தோறும் அநேகதந்திச் செய்திகள் அனுப்பப்படலாயின. இவள் குவெபெக்கைச்சேர்ந்த சென் ஆகத்தாவிலுள்ள ஓர்கன்னிகாமடத்தில் தனதுகோடைகால விடுமுறையைககழித்துவந்தாள். அந்தமடத்தில் ஓர்கன்னியாஸ்திரீயாகவேண்டுமென்றே இவள் சிந்தித்துக்கொண்டிருந்தாள். இவளின் பிரேத அடக்கத்தின் போது குருமாரும், கன்னியாஸ்திரீமாருமாகச் சுமார் நூறு பேரும், மற்றும் ஐயாயிரம்மக்களும் சமுகமாயிருந்தார்கள். அவளுடைய நான்குசகோதரர்களும், இருமைத்துனர்களும் பிரேதப்பேழையைத் தூக்கிச் சென்றார்கள்.

### அர்ச். சூசையப்பரின் மகாலயம்

திருச்சிலுவைச் சபையைச் சேர்ந்த ஓர்பரிசுத்தவானன அந்திரே பிறதர்அவர்கள் இற்றைக்குச் சுமார் 50 வருடங்களுக்குமுன் கனடாதேசமொண்றியல்நகரிலுள்ள தமது சபைமடத்திலே ஓர் போட்டராகக் கடமைபார்த்து வரும்போது, மாணவர்களுக்குத் தலைமயிர் வெட்டிப் பணஞ்சேர்க்குமாறு இடையிடையே ஓய்வெடுத்துக் கொள்வார். அவ்வாறு அவர் சேகரித்தபணங்கொண்டு அர்ச். சூசையப்பருக்கு ஓர்திருசேத்திரத்தை — அதாவது மரங்கொண்டு ஓர்சின்னக்கோவிலை அமைத்தார். இது அந்திரே பிறதரின திருசேத்திரமென்று அறியப்படலாயிற்று. அதன் மேல் 1918-ம் ஆண்டு அதனிடமாக 2,000 பேரைக் கொள்ளக் கூடிய ஓர்பெரியகோவில் கட்டப்படலாயிற்று. இப்போது அதனிடமாகப் 'பஸிலிக்கா' எனப்படும் மகாலயம்ஒன்று கட்டப்பட்டுவருகிறது. இன்னும் நான்குவருடங்களில் இதுபூர்த்தியாகவிருக்கிறது. அந்திரேபிறதர்அடியிட்டதுமுதல் இதுவரையிலே இத்திருசேத்திரத்தை 20 லட்சம் பேருக்குமேல் தரிசித்திருக்கின்றார்கள்.

### வானசாஸ்திரியான குருவானவர்

நாற்பதுவருடகாலமாக இரவில் நித்திரைசெய்தறியாத பிரபல வானசாஸ்திரியான வண. தியோப்பிலே மொறோசுவாமியார் சமீபத்திலே தமது 86-ம் வயதில் காலஞ்செல்லலாயினர். இவர் பூர்ஜெஸ் எனுமிடத்திலுள்ள தமதுவானமண்டல அவதானநிலையத்தின் கோபுரத்தில் அமர்ந்து அஸ்தமனமுதல் அதிகாலைவரையில் இராமுழுவதும் நட்சத்திரங்களின் போக்கை அவதானிக்கும் வழக்கமுடையவராயிருந்து, அதன்மேல் அயலிலுள்ள சிற்றாலயத்தில் திவ்விய பூசை நிறைவேற்றிவிட்டு நித்திரைக்குச் செல்வார். இளமை தொட்டுத்தானே நட்சத்திரங்கள் இவரைவசப்படுத்திக்கொண்டன. இவரது முதல்விளையாட்டுச்சாமான் சின்னஞ்சிறிய ஓர் தூரதிருஷ்டிக் கருவியே. இவர் ஓர்குருத்துவ மாணவராய் இருந்தபோது இவருக்குள்ள வானசாஸ்திரதிறமையை அவதானித்தசிரேஷ்டர்கள் அதனையும் தொடர்ந்து படிக்குமாறு அவருக்குச் சுதந்திரம்அளித்தனர். வண. மொறோசுவாமியார் உலகமுழுவதிலுமுள்ள வானசாஸ்திரிகளாலும், மற்றும் விஞ்ஞானிகளாலும் நன்கறியப்பெற்றவர். விஞ்ஞானசம்பந்தமாய் இவர் 109 புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

பிரான்சீஸ் தொம்சன்எனும் பேரான ஆங்கிலகவிஞரின் சகோதரியான சங். ஆஸ்ரின்தாயார் மான்செஸ்றர் நகர கன்னிகாமடத்திலே சமீபத்தில் தமது 93-வது பிறந்த பெருநாளைக் கொண்டாடினர். இவர் கடந்த 67 வருடங்களாக ஓர்கன்னியாஸ்திரியாக இருந்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1954-ம் ஆண்டு
ஆவணி மாதம் 26-ந் திகதி

## சமயங்களும் சகிப்புத்தன்மையும்

இன்றையஸ்ரீலங்காவில் சமய கலகமோ, அன்றேல் சாகியகலகமோ யாதொன்று நடைபெறுமானல், ஆட்டுக்கடாச்சண்டையிலே நரிஇரத்தங்குடித்தவாறு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கும் ஒருபாலார் அதனைத் தங்களுக்குச்சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தயங்கவேமாட்டார்கள். ஓர் நாட்டிலே பெரும்பான்மைச் சமயத்தினர் சிறுபான்மைச் சமயத்தினரைத் தங்கள் இட்டப்படியே அடக்கியாளமுயன்றால், அல்லது அந்நாட்டிலே பெரும்பான்மைச் சமூகத்தினர் சிறுபான்மைச் சமூகத்தினரை ஒடுக்கிவைக்கமுனைந்தால், அதனை ஓர்சனநாயக நாடென்றாவது சுதந்திரநாடென்றாவது சொல்லிக்கொள்ளமுடியாது. சகலமதங்களையும் சகலரும் மதித்துநடக்கவேண்டும். சகலசாகியங்களையும் சகலரும் கனித்துநடக்கவேண்டும். அவ்வாறு நடந்துகொண்டால்தான் நாட்டின்முன்னேற்றத்துக்காகச் சமயவேறுபாடில்லாது, சாகியவேறுபாடில்லாது சகலரும் ஒத்துழைக்கமுடியும். மங்கலவாத்திய வரிசைகளுடன் மணமான புதிய தம்பதிகளை வீதிவழியே ஊர்வலமாக அழைத்துச்செல்லும் போதோ, அன்றேல் அமங்கலவாத்திய வரிசைகளுடன் மனிதபிரேதம் ஒன்றை ஊர்வலமாக வீதிவழியாய்ச் சேமக்காலைக்கு அல்லது மயானத்துக்கு எடுத்துச்செல்லும்போதோ, அன்றேல் வாத்தியவரிசைகளுடன் பிரசித்த ஊர்வலங்கள் நடத்தும்போதோ இடைவழியில் எதிர்ப்படுகின்ற வழிபாட்டுத் தலங்களுக்குமுன்பாக அவ்வாத்திய கோஷங்களைப் பின்னும்முன்னுமாக ஓரளவுதூரம்வரை நிறுத்துவதெல்லாம் மக்களின் சுயமரியாதையையும், சகலசமயங்களையும் சகலரும் கௌரவிக்க வேண்டுமென்ற மனுத்தன்மையையும், பொறுத்ததாகும். அங்ஙனம் நிறுத்திவிடுகிறவழக்கம் இன்று நேற்றுஉண்டானதல்ல. புராதனகாலந்தொட்டே இருந்துவருகிறதென்பதற்குச் சரித்திரமே சான்று. ஆனல், இன்றையநிலைமையில் இலங்கையிலுள்ள சகலசமய தலைவர்களையும், சமயஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் வரவழைத்து ஓர்மகாநாடு கூட்டவேண்டிய ஆவசியகமேற்படலாயிற்று. சென்றவெள்ளிக்கிழமைகூடிய இந்தமகாநாட்டிலே பிரதமர்பேசியது எல்லோராலும் ஊன்றிச்சிந்திக்கப்படவேண்டியதாகும். "இலங்கை எல்லாச்சமயங்களுக்கும் சொந்தமானது; எந்தஒருசமயத்திற்கும் விசேஷஉரிமைகள் கொடுபட்டில்லை; அதனல் சகலசமய தலைவர்களும் தத்தம் சமயங்களைப் பின்பற்றுவோருக்குப் பரஸ்பர சகிப்புத்தன்மையும், மறுசமயங்கள் மட்டில் மனவொற்றுமையும் காண்பிக்கும் அறிவையூட்டவேண்டும்; நம்முடையமதங்கள் வேறுபட்டிருந்தபோதிலும் சட்டதிட்டங்களைக் காட்டிலும் சமயபோதனைகளே நம்மைச் சிறந்த மக்களாகச் செய்கின்றன என்னும் ஏகநோக்குமுடையவர்களாக இக்குநாம் கூடியிருக்கின்றோம்; பாசிஸ்த, கம்யூனிஸ்த நாடுகளில் சமய போதனைகள் இல்லாத சட்டதிட்டங்கள் மனிதனை எத்தகைய கதிக்குக் கொண்டுவந்துள்ளன என்பதை நாம் கண்டுவருகிறோம்; சமயமில்லாத அந்தநாடுகளிலெல்லாம் அதிருப்தியும், மக்களிடையே துன்பமுந்தான் நிலவிவருகின்றன; எங்கள் நாட்டின் சேமநிலைக்குச் சமய ஒற்றுமை நிலவவேண்டுமானல், ஒவ்வொருசமயமும் சகிப்புத்தன்மைகாட்டி ஏனையசமயங்களுக்கு மரியாதை அளிக்கவேணடியது அவசியமாகும்" என்பது அவர்பேசியதில் ஓர் பகுதியாகும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குத் தாயமாகும். சமய வழிபாட்டுத் தலங்கள்முன்பாக வாத்தியங்கள் முழக்கும்படிசெய்தோ, அன்றேல சமய, சாகிய சம்பந்தமான கலவரங்கள் பிறக்கும்படிசெய்தோ ஊரை இரண்டுபடுத்திவிடின் தங்களுக்குத் தாயமாக முடியுமென்று காத்திருக்கும் நாஸ்திக, சமதர்மவாதிகளும், சமயதுரோகிகளும் தலைகாட்டியுள்ளகாலம் இதுவென்க.




## சதாசகாயமாதா கோணம்

சதாசகாயமாதா எங்கள் மத்தியஸ்தி

தேவதாயார் வரப்பிரசாதங்களைப் பெற்றுத்தரும் மத்தியஸ்தி. ஏனென்றால், எமது இரட்சணிய அலுவலில் தேவதாயார் உடன்முயற்சிக்காரியாக இருந்திருக்கிறா. அவவுடைய திருக்குமாரன் எங்களுக்காகச் செய்து முடித்த இரட்சணிய அலுவலில் அவ பங்குபற்றியிருக்கிறா. தேவசுதன் மனுஷனாக அவதரிக்க விரும்பியபோது தேவதாயாரின் சம்மதத்தைக் கேட்டாரல்லவா? "இதோ ஆண்டவருடைய அடிமையானவள்" என்று சொல்லிச் சம்மதங்கொடுத்தபடியினால் தேவசுதன் மானிடனானர். ஆதலால், எமது இரட்சணியத்துக்குத் தேவதாயார் தமதுசம்மதத்தினால் பங்காளியானார். பங்காளியானபடியால் இரட்சணியத்துக்கு உடன் முயற்சிக்காரியானா.

இரட்சணியஅலுவலில் பங்காளியானபடியால், இரட்சிப்புக்காக ஆண்டவர்அடைந்துதந்த வரப்பிரசாதங்கள், பெறுபேறுகளிலும் அவவுக்கு உரிமை கிடைப்பதாயிற்று. அந்தஉரிமையின் நிமித்தம், ஆண்டவர்அடைந்த பெறுபேறுகள், வரப்பிரசாதங்களிலும் உரிமைபூண்டவளானா. வரப்பிரசாதங்களைப் பெற்றுத்தரும் உரிமைமாத்திரமல்ல, அவற்றைச்சகலருக்கும் பகிர்ந்து கொடுக்கும் உரிமையும் உடையவ. இது திருச்சபையின் போதகம். திருச்சபை தேவதாயாரை நோக்கி: "எங்கள் சீவமே, எங்கள்தஞ்சமே, எங்கள் இரட்சணியத்தின் காரணியே, வரப்பிரசாதங்களின் தாயே" என்று மன்றாடுவதின் கருத்தென்ன? எங்கள் ஆன்மசீவியத்துக்கும், இரட்சணியத்துக்கும் வேண்டிய சகலவரப்பிரசாதங்களையும் அவதாமே பகிர்ந்துகொடுக்கிறா என்பதினால் அல்லவா?

"எல்லாம் மரியாயின் மூலமாகக் கிடைக்கின்றன" என்பது அர்ச். பேர்னாட்டின்வாக்கு.

"தேவமாதாவே! உமதுமூலமாக அல்லாது ஒருவரும் இரட்சணியம் அடைவதில்லை. ஆபத்துகளில்நின்றுந் தப்பிக்கொள்பவர்கள் உம்மாலேயே தப்பிக்கொள்ளுகிறார்கள். ஆண்டவருடைய அன்புக்குரியதாயே, பரலோகத்தில்நின்று வருங் கொடைகளைப் பெற்றுக்கொள்பவர்கள் உமது மூலமாகவே அவற்றைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்" என்பது அர்ச. ஜேர்மெயின்வாக்கு.

"பரலோகத்தினின்றும் பூலோகத்துக்குவரும் நன்மைகள் தேவமாதாவின் கரங்கள்வழியாக அல்லாது வேறுவழியாக வருவதில்லை" என்று அர்ச். பீற்றர் தமியான் படிப்பிக்கின்றார்.

"மனுஷருக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள்எல்லாம், நன்றாக வரையறுத்து வகுக்கப்பட்ட மூன்றுபடிகள் வழியாக இறங்கிவருகின்றன. தேவன் முதற்படி. அவரிடமிருந்து யேசுநாதரிடம் அக்கொடைகள் இறங்கிவருகின்றன. யேசுநாதரிடமிருந்து அவைகள் மாதாவிடம்வருகின்றன. தேவமாதா அவற்றை மனுக்குலத்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறா" என்று அர்ச். பெனடிற் படிப்பிக்கிறார்.

தேவதாயார் எங்களுக்குத்தாயார். அவ சகல வரப்பிரசாதங்களையும் எங்களுக்காகப் பெற்றுக்கொள்ளுகிறா. பெற்று எங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கிறா என்பதை அறிந்து எவ்வளவோ நம்பிக்கையுடன் அவவிடம் போகலாம். தேவதாயாரின் விசேஷஉதவிசகாயம் நமக்குஎவ்வளவோ அவசியமென்று சொல்லவேண்டியதில்லை. நமக்கு ஒத்தாசைசெய்ய வல்லமையுள்ள சதாசகாயமாதாவிடம்அல்லாது நாம்வேறு யாரிடம் போகக்கூடும்? அவவுடைய திருப்பாதங்களை இறுகக்கட்டி அரவணைத்துத் தாயே அபயம்! அபயம்! என்று ஓலமிடுவோமாக. அவ எங்களைக் கைவிடமாட்டா. அவவுடைய மன்றாட்டுக்களின் உதவியைக்கேட்ட ஒருவனாவது அவவால் கைவிடப்பட்டதேயில்லை.

## ஆவணி மாதம்

போதுக்கருத்து:— கிறீஸ்துவ விசுவாசிகள் ஆபாசமும், வேதவிரோதமுமான பிரசுரங்களை ஊக்கத்தோடு எதிர்த்துப் போராடும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— லத்தீன் அமெரிக்க மாணவரிடையே வேதபோதக மனப்பான்மை வளர்ந்து செழித்தோங்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

## தமிழ் இலக்கியக் கழக இலக்கியப் போட்டி

இப்போட்டியில் கலந்துகொள்பவர் தம் கையெழுத்துப் பிரதிகளை இம்மாதம் முடியுமுன் (31-8-54) எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

சேவியர் தனிநாயகம்,
த. இ. க, தூத்துக்குடி

புத்தக மதிப்புரை

## தன்னைக் கையளித்தல்

பிரசுரம்: அர்ச். சூசையப்பர் கல்லூரி திருச்சிராப்பள்ளி.
விலை: ரூபா 2-0-0

மோட்சவழியே நாமசெல்லவேண்டுமாயின் எம்மைப்பரித்தியாகஞ் செய்யவேண்டும். "யேசுக்கிறீஸ்துநாதரிடமாய்த் தெய்வீகவாழ்வு வாழ்வார்அனைவரும் வாதனைக்கு ஆளாகவேணடும்." இவ்வுலகஇன்பங்களை, மகிமைகளை, பெருமைகளை வெறுதது நீக்கவேண்டும். பூவுலகஇன்பத்தைத் துச்சமாகக் கருதிவாழ்ந்த புனிதர்களுக்கே வானுலகஇன்பம கிட்டுவதாகும. அவ்வாறு வாழ்ந்தவர்களைத்தான் அர்ச்சியசிட்டர்களென அழைக்கின்றோம். திருச்சபையானது வாழத்திப்போற்றி வணங்கிவரும் பல்லாயிரக்கணக்கான அர்ச்சியசிட்டர்களது வாழ்க்கை வரலாறுகளில் நாமகண்டறிந்த பொதுவான உண்மை எது? அவர்கள்ஒவ்வொருவரும் தமதுவாழ்வைச் சர்வேசுரனுக்குக் கையளித்திருந்தார்கள் என்பதல்லவா? தேவதாயார் இதற்கோர் உத்தமமாதிரிகையா யிருந்தாரன்றோ!

எனவே, மோட்சபேரின்பம் அடைதற்கான சுருக்கவழி "தன்னைக் கையளித்தல்" என்பது புலனாகும். இதுபற்றித் தமிழ்மொழியிலே நல்லவொரு நூல் வெளிவராத பெருங்குறையை இன்று திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் பிரசுராலயத்தார் தீர்த்துவைத்திருக்கின்றனர். இது ஒருமொழிபெயர்ப்பு நூலாகும். இதன் மூதனூலாசிரியர் வண. ஸ்கைரவர்ஸ் சுவாமிகள் ஆவர். இந்நூல் தன்னைக்கையளித்தலின் விதிமுறைகள், சரணடைவித்தலின் செயல்முறை, தன்னைக்கையளித்தலின் விளைவுகள்என்ற மூன்றுபாகங்களாகத் தொகுத்து, அவைவொவ்வொன்றும் மும்மூன்று அதிகாரங்களாகவகுத்து, மொத்தம் அறுபத்தொரு இயல்களாகவிரித்து எவரும்இலகுவாக விளங்கத்தக்க தெள்ளிய தமிழ்நடையில் யாவும் விளக்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர்இயலும் உயரியகருத்துக்களை அடக்கியதாய், கற்பவர்மனதிலே கடவுட்பக்தியை எழுப்பும் தியானங்களாக அமைந்திருக்கின்றன. ஆங்காங்கு மிளிர்ந்துகொண்டிருக்கும் வேதாகமவாக்கியங்களே மூலநூலாசிரியரின் அறிவுத்திறனை எடுத்துக்காட்டுவதாகும். பொதுவாகக்கூறுமிடத்து, இந்நூலானது ஞானச்சீவியத்தோடிருப்பவர்களை மேன்மேலும் ஸ்திரப்படுத்துவதாயும், அசமந்தராயிருப்போரைத் தட்டிஎழுப்பி அவர்கள்தேவநேசத்தை அடைதற்குத் தூண்டுகோலாயுமிருப்பதால் எந்தஅந்தஸ்திலுள்ளவர்களும் படித்துப் பயனடையக்கூடியதாக அமைந்திருக்கின்றது.

ஆகவே, கத்தோலிக்கர்அனைவரும் மரியாயின் இப்புனிதஆண்டில் அத்திருத்தாயாரின் அன்புச்சின்னமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நூலைப்படித்துத்தெளிந்து இதன் அட்டைப் படத்தில் பொறிக்கப்பட்டிருப்பதுபோல முழுசுவாதீனம், அறிவு, நினைவு, ஞாபகம், புத்தி, உடல், பொருள், ஆவி, ஐம்புலன்யாவையும் ஆண்டவருக்கே கையளிப்பதாக வாக்குறுதிசெய்து, ஆன்மீக வாழ்வில் புத்துணர்ச்சி அடைவார்களாக! எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தெருப்பு திருக்குடும்ப நோவிஷியற்றில் ஓர் வைரயூபிலி

பண்டத்தெருப்பு யாழ்நகரிலிருந்து ஏறக்குறைய ஒன்பதுமைல்தூரத்தில் அமைந்துள்ளது. மாதா பக்தர்கள் திரள்திரளாக அண்டிவரும் பிரசித்த தலமாகிய பாத்திமாகிரியின் அண்மையிலுள்ள திருக்குடும்பப் புகிடகொவிஷியற்கட்டிடத்தின் சிலாக்கியங்களை அவர்களில் எவரும்காணுதிருக்க முடியாது. இவ்வழகிய மாடிவீடு தற்கால நவீனநாகரீகமுறையாக மின்சாரதீபத்தினாலும், தண்ணீர்ப்பாசனத்தினாலும் சிறந்துவிளங்குகின்றது. அநேகஆண்டுகளாக இளவாலையில் நிலைகொண்ட இந்த நொவிஷியற் 1952-ம் ஆண்டு மார்கழிமாதம் இடம்மாறி இந்தஅமைதியான குறிச்சியை வந்தடைந்தது. இதில்நவகன்னியர்கள் வாழத்தொடங்கி 20 மாதங்கள் ஆகின்றன. தேவனுக்கு இடையறாது திருத்தொண்டுபுரிந்து தற்போது இளைப்பாறியிருக்கும் திருக்குடும்பகன்னிகாசபைக் கன்னியர்ஒருவரின் வைரயூபிலித்தினமன்று காலை நடைபெற்ற பாடற்பூசைக்கு நானும சமுகமளித்திருந்தேன. ஆனல், அது நிறைவேற இன்னும்அதிகநேரம் இருந்தமையால் நான் இந்தமடத்தின் சிறப்பைக் கண்டுகொள்ள ஆசைகொண்டேன்.

என்னே! வனந்தரத்தின் மத்தியில் அழகிய பூங்காவொன்றைக் கண்டாற்போலப் பிரமித்துநின்றேன். அங்கே கண்ணுற்றாரைக் களிக்கச்செய்யும் ஓர் ஆலயம். அதன்முன் ஓர்சிறந்ததோட்டம். அதன் கண்கொள்ளாக்காட்சி என் மனதைப் பூரிக்கச்செய்தது. கட்டடங்கள் அதிபுனிதமாயிருந்தன. ஆலயத்தின்வலதுபுறமாகச் சென்றேன். சென்றபோது நெற்றிவியர்வை நிலத்தில்விழ ஊக்கமாகஉழைக்கும் அறிகுறிகளைக்காட்டும் ஓர்மரக்கறித்தோட்டம் தென்பட்டது. சாதாரணமான கறிவகைகளைமாத்திரமன்று, மலைநாட்டுக் கறி, கனிவர்க்கங்களையும் கண்டதே எனக்கு ஆச்சரியம்மேலிட்டது.

சுற்றிக்கொண்டு திரும்பவும் ஆலயத்தைநோக்கி வரும்போது யூபிலி நாயகியான சங். தியோப்பின் தாயாரவர்களைக் கண்டேன். இந்தவீரத் தாயைச் சந்திக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமை எனது பேரதிர்ஷ்டமேயென உணர்ந்துகொண்டேன். அவரைவாழ்த்தினேன். அவருக்கு என்மனமார்ந்த சோபனமொழிகள் சாற்றினேன். இந்த நல்லதாயார் பிரான்ஸ்தேசத்திலே பொயிற்றுநகரைச்சேர்ந்த அசெயிஸ்என்னும் பட்டினத்தில் 81 ஆண்டுகளுக்குமுன் தேவபக்திநிறைந்த ஓர் குடும்பத்தில் உதித்தார். இந்தஉத்தம கத்தோலிக்ககுடும்பத்தில் உதித்தபிள்ளைகள் எண்மருள் நால்வர் தங்களைத் தேவஊழியத்திற்கென அர்ப்பணஞ்செய்த மிஷனரிமார் ஆனார்கள். அவர்கள்நால்வரில் ஒருகுரவர் இந்தோசீனவில் புகழ்ச்சிக்குரியவிதமாய்த் தேவதொண்டாற்றிவந்து நித்தியசம்பாவனை பெறலாயினர். ஏனையமூவருமாகிய சங். தியோப்பின் தாயார், மூத்தசகோதரர் வண. வலென்ரின் உக்தின்சுவாமியார், வண. அல்பிறெட் உக்தின்சுவாமியார் ஆகிய மூவரும் இப்பெருந்தினத்திலே ஆலயத்தில் ஒன்றுகூடியிருந்ததை யாவரும் கண்குளிரக்கண்டு ஆனந்தித்தார்கள்.

பிரான்ஸின் செல்வப்புதல்விகளுள் இப்புனிதவதியைத் தேவன் 1894-ம் ஆண்டு தெரிந்தெடுத்துத் தமக்கு நீண்டகாலம் தொண்டாற்றும்படியாக இலங்காதுவீபத்திற்கு அழைத்துவந்தார். தற்போது 82 வயது பூர்த்தியாகும் சங். தாயாரிலே அவர் ஓர்உதாரகுணமுள்ள தியாகத்தைக் கண்டார்போலும். பிரான்ஸிலே ரேய்மண்ட் நகரிலுள்ள நொவிஷியற்றில் தியோப்பின்என்னும் புனிதநாமத்தை இவர் சூடினர். பிறராத்தும இரட்சணிய வாஞ்சைகொண்டு 1899-ம் ஆண்டு யாழ்ப்பாணம்வந்து கைத்தொழிலிலும், அனதைகளைப் பராமரிப்பதிலும சிறப்பாக ஈடுபட்டுவந்தார். 1918-ம்ஆண்டு கார்த்திகைமாசம் இளவாலைக் கன்னிகாமடத்தின் சிரேஷ்டதாயாராக நியமனம்பெற்று மூவிருஆண்டுகளாக அப்பதவியை வகித்திருந்து தாயன்பை எங்கும்பரப்பிப் பின்னர் அனுராதபுரக் கன்னிகாமடத்தின் சிரேஷ்டதாயாராக நியமிக்கப்பெற்றார் தமமுடைய குன்றாதஉழைப்பினுலும, குறையாத தியாகசேவையாலும் அந்தமகாயுத்த காலத்திலும் இவர் தமதுஅனதைகளுக்கு அருமைத்தாயாயிருந்து அவர்களை ஆதரித்துவந்தார். அதன்மேல் மூன்றுவருடகாலம் இளவாலைமடத்தின் சிரேஷ்டதாயாராகக் கடமையாற்றியபின் தமது பழையஇல்லமாகிய அநுராதபுரத்தில் 1933-ம் ஆண்டுவரை சிரேஷ்டதாயாராகத் தொண்டுபுரிந்தார்.

இவ்விதம்தொண்டாற்றியபின் தமது வாழ்க்கையின் இறுதிகாலத்திலே பண்டத்தெருப்பு நவகன்னியர் மடத்தை உருப்படுத்தியவர்களில் ஒருவராக நவகன்னியர்மத்தியில் துலங்கி இந்தமடத்திலே தமது இறுதிகாலத்தைக் கழித்துவருகின்றார். இம்மூன்று சகோதரபக்தர்களும நமது மக்களிடையே ஆற்றிவந்துள்ள அரும்பணிகளை யாழ்ப்பாணத் திருச்சபைஅதிகாரிகள் போற்றிப்புகழ்ந்துள்ளார்கள்.

அன்று மணிகள்சப்திக்கின்றன, இப்புனிததாயாரின் யூபிலிவிழா ஆரம்பமாக. மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்களும் தரிசனை அளித்து நிற்கின்றார். அவரைத்தொடர்ந்து யாழ்ப்பாண மேற்றிராசன பரிபாலனரான மகாவண. எச். லெக்குத்தூர் சுவாமியவர்களும், மற்றும் அநேக குருப்பிரசாதிகளும் சமுகமளிக்கின்றனர். ஆலயவாயிலிலே ஆண்டவர் அவர்கள் தலைமைவகிக்க, ஏனையகுருப்பிரசாதிகள் பின்தொடர்ந்து கீதங்கள் படித்துச்செல்ல, எல்லோரும் ஆலயத்துள் பிரவேசித்ததும் திவ்விய பூசை ஆரம்பமாயிற்று. வண. வலென்ரின் உக்தின் (சகோதரர்) சுவாமியவர்கள் அதிவண. எஸ் இம்மனுவேல், வண. அல்பிறெட் உக்தின் என்னும் குரவர்களின்உதவியுடன் பூசைப்பலிநிறைவேற்றினர். நவகன்னியர்கள் இனியகீதங்கள்படிக்கத் திவ்வியபூசை நிறைவேறியது. பூசையின்போது சங். தாயார் அவர்களுக்குப் பரிசுத்தபாப்பாசர் தமது ஆசீர்வாதம்அருளி அனுப்பி வைத்ததந்திச்செய்தி படித்துக்காட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து இவ்வீரத்தாயின் குணதிசயங்களைப் பாராட்டிச் சுபவாழ்த்துக்கூறியும், தீர்க்காயுள்விரும்பியும் மேற்றிராசன பரிபாலனரான சுவாமியவர்களால் ஓர் இனிய பிரசங்கம் செய்யப்பெற்று, தேவதோத்திரகீதமும், சங். யூபிலி நாயகியின் சுயபாஷையில் ஒருஇனிய கீதமும் படிக்கப்பட்டன.

அதன்மேல் சகல குருப்பிரசாதிகளும் சமுகமளிக்கச் சகலரும் காலைப்போசனம் அருந்தியபின் வண. அல்பிறெட் உக்தின் சுவாமியவர்களால் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டு, நன்றியும், அன்புநிறைந்த இருதயங்களுடன் தேவகீதங்கள் படிக்கப்பட்டன. அன்று சங். தாயார் அவர்களுக்குத் தேவன்அளித்த பேரின்பத்தை யார்தான் உணரக்கூடும்? தங்களைமுற்றாகத் தேவதொண்டுக்கு அர்ப்பணஞ்செய்த ஆத்மாக்கள் இதனை அ[illegible]மன்றோ! பின்னர் அங்குசமுகந்தந்த குருப்பிரசாதிகள் யூபிலிச்சோபனங் கூறித் தத்தம்பதிகளுக்குச்செல்ல, ஆனந்தம்பூரித்தகன்னியர்கள் கும்பல் கும்பலாகக் கூடிச்சென்று வாழ்த்துக்கள்கூறினர். அங்கு சமுகமளிக்க வசதிப்படாதவர்கள் கடிதங்கள்மூலமாயும், தந்திகள்மூலமாயும் தங்கள்துதிகளைச் சமர்ப்பித்தனர். ஈற்றில் நவகன்னியரால் சோபனப்பாடல்களும், பிறவும் சங். யூபிலிநாயகியின் இதயத்தைப் பூரிக்கச்செய்பவே இந்தப்பாக்கியமானநாள் நிறைவாயிற்று.

— நிருபர்

## மதிப்புரைகள்

### புதிய பத்திரிகை

'கிறீஸ்தவ தீபிகை' என்னும் நாமத்துடன இம்மாதம்முதற்தேதி தொடக்கமாக ஒருபுதிய தமிழ்ப்பத்திரிகை வெளியாகியுள்ளது. மாதம இருவெளியீடு. பக்கங்கள் நாலு. ஆசிரியர் கனம். M. A. இரத்தினராஜா, B. D. அவர்கள்.

'கிறீஸ்துவே மனுஷ நம்பிக்கை; அவரே உலகநம்பிக்கை' என்ற கிறீஸ்தவ விசுவாசத்தையும், பண்பாட்டையும உலகுக்குப் பகிரங்கமாக எடுத்துக்காட்டுவதே இப்பத்திரிகையின் பிரதானநோக்கமாகும்.

இதன் முதல்இதழிலே இலங்கையில் கிறீஸ்துமதம், சுவிசேஷஊழியமும் அதன்தாற்பரியமும், நல்வாசிப்பின நல்வழக்கம் என்பன போன்ற பொருள்பொதிந்த சமயக்கட்டுரைகள் திகழ்கின்றன. போராசிரியர் C. E. M. ஜோட்என்பவர் எழுதிய "நான் ஏன் கிறீஸ்தவன்?" என்ற கட்டுரை நாஸ்திகத்துக்கே சாவுமணி அடிக்கத்தக்க தொன்றாகும். சொல்லின்செல்வராய திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதமுன்வந்துள்ள புதியதொடர்கட்டுரையின் "வீரமாமுனிவர்" என்ற அதிகாரம் பத்திரிகைக்குத் தனிஅழகைத் தந்துநிற்கின்றது.

நாஸ்திகம் பரவிவரும் இவ்வேளையிலே பத்திரிகைகளின்தொண்டு அளவிறந்ததாகும். தீபிகையும் இப்பணியிலே பெருஞ்சேவைசெய்து நிற்குமென்பதே எமதுபெரு நம்பிக்கையாகும். எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

### மொழி பெயர்ப்புக் கலை

ஆக்கியோன்: திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்கள்.
விலை: ரூபா இரண்டு.
கிடைக்குமிடம்: விவேகானந்த சபைப் புத்தகசாலை 34, மேட்டுத்தெரு, கொழும்பு—13.

கல்விஉலகில் இக்காலத் தேவைக்கேற்ற மொழிபெயர்ப்பு நூல்கள்பல வெளிவருகின்றனவாயினும், அவற்றைத் திட்பநுட்பமுற ஆக்கிவெளியிடுதற்கேற்ற கருவிநூல்கள் இல்லாமை பெருங்குறைபாடாகும், கல்விப்பகுதியார் இருபாஷைகளையுமறிந்த கலைவல்லார் பலரைக்கொண்ட குழுஒன்றின்மூலம் இக்குறைபாட்டினை நீக்க முன்வரவேண்டும். அவ்வாறு பலர் ஒருங்கு கூடிச் செய்ய வேண்டிய பெரும்பணியைத் திரு. அ. க. சுப்பிரமணியம்அவர்கள் "மொழிபெயர்ப்புக்கலை" என்ற இந்நூல்மூலம் தாமே தன்னந்தனிமையாகச்செய்து தமிழ்த்தாய்க்கு அளப்பரும்புகழை ஈட்டித்தந்துள்ளார். ஆசிரியர் தமக்கு இயல்பாகவேயுள்ள நுண்ணறிவையும், மற்றும் இருமொழிப் புலமையையும், மொழிபெயர்ப்புத்துறையில் தமக்குண்டான பரந்தஅனுபவத்தையும் துணைக்கொண்டு இவ்வரியகலைநூலைத் தமிழுலகுக்கு அளித்துள்ளார்.

பெரியாரொருவர் குறிப்பிடுவது போல், இந்நூல் அளவிற்சிறியதாயினும், இதுதரும்விளக்கம் பெரிது மாத்திரமன்றிப் புதிதுமாகும். ஆசிரியர் இந்நூலை மொழிக்குக்காரணம், உணர்ச்சி, மொழிபெயர்ப்பில் உணர்ச்சிப்பெருக்கு, கிறீஸ்துவபாதிரிமாரும் கத்தோலிக்கதிருச்சபையும் காட்டியவழி, மொழிமரபு, கடிதங்களில் மரபுவழுவாமை, எழுத்திலக்கண நெறிபிறழாமை, எளிமையும்இனிமையும், சட்டசம்பந்தமான மொழிபெயர்ப்பு, கலைச்சொற்கள், முடிவுரைஎனப் பன்னிரபகுதிகளாக வகுத்து மொழிபெயர்ப்போர் அறியவேண்டிய அரிய பலவிஷயங்களையும், அவர்கள் மாத்திரமன்றித் தமிழ்எழுத்தாளர்கள் அவசியகம் அறியவேண்டிய பலஅரியவிதிகளையும் உதாரணங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆகையால் இந்நூல் மொழிபெயர்ப்பாளர்களுக்கு மாத்திரமன்றி, கல்வித்துறையில் ஈடுபடும்யாவர்க்கும், பிரதானமாக ஆசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள், அரசாங்க அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர்க்கும மிக்கபிரயோசன முள்ளதொன்றென்பதும், தாம்பெற்றஇன்பம் பெறுக இவ்வையகமும் என்றகருத்தோடு இந்நூலைஎழுதிய ஆசிரியர்க்குத் தமிழுலகம மிக்ககடப்பாடுள்ளதென்பதும் எம் துணிபாகும. யாம இந்நூலைப் படித்துப் பல அரியவிஷயங்களை அறிந்தோடு பெருமகிழ்ச்சியுங் கொள்ளலானேம். ஆசிரியர் மேலும்மேலும் இக்கலைத்துறையில் ஈடுபட்டுழைக்க இறைவன் அருள்பாலிப்பாராக. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## சுதேச வர்த்தமானம்

### மானிப்பாய் ஆஸ்பத்திரி

மானிப்பாயிலுள்ள கிறீன்ஞாபக ஆஸ்பத்திரியில் வைத்தியதொண்டாற்றுமாறு டக்றர் ஏ. பி. சி. துரை, எல். ஆர். சி. பி. & எஸ் (எடின்) — எல். ஆர். எவ். பி. & எஸ் (கிளாஸ்)—டி. ரி. எம். & எச். (எடின) அவர்கள் புதிதாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

### கல்லோயாப் பள்ளத்தாக்கு

கல்லோயாப்பள்ளத்தாக்கின் பெரிய நீர்த்தடாகம் இருந்துவருகின்ற இங்கினியகாலை ஊவாமாகாணத்துள் அடங்கியிருக்கும் காரணமாக இதுவரை கண்டி மேற்றிராசனத்தைச் சேர்ந்திருந்தது. ஆனல், பரிசுத்தஸ்தானம கருதினல்மார் சகலரினதும் சம்மதியோடு விதித்திருக்கும் கட்டளை ஒன்றால் அது திரிகோணமலை மேற்றிராசனத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### நீதிமந்திரியாரின் விஜயம்

நீதிமந்திரியாரான திரு. எம். டி. எச். ஜயவர்த்தன அவர்கள் நாளைத்தினம யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து காலை கிளிநொச்சிக் குடியேற்றதிட்டங்களையும், உழவையந்திர நிலையத்தையும். கூட்டுறவுக் கமவினைபொருள்-உற்பத்தி விற்பனவுச் சங்கங்களையும் பார்வையிடுவார். பிற்பகல் 4-30மணிக்கு யாழ்ப்பாணஇந்துக்கல்லூரியில் ஆரம்பமாகிநடந்தேறும தேசிய சேமிப்பு மகாநாட்டுக்கும, விளையாட்டுப்போட்டிக்கும் சமுகமளிப்பார். மறுநாட் சனிக்கிழமை அரசினர் சிமெந்துத் தொழிற்சாலையையும், தோலகட்டி ஆச்சிரமத்தையும், பிறவற்றையும் பார்வையிடுவார்.

* * *

● ஒன்பதுவருடகாலம் தொடர்ந்து வேலைசெய்தபின் ஹொங்கொங்தீவில் இருந்துவருகின்றபிரான்சிஸ்கன்சபைக் குருமார் பழையஏற்பாட்டின் எட்டாவதும், கடைசியுமான காண்டத்தையும் சீனப்பாஷையில் மொழிபெயர்த்து முடித்திருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

விடுமுறை முடிந்து அடுத்தவாரத்தில் உங்கள் பாடசாலை திரும்ப ஆரம்பமாகும். அதுமுதல் மரியாயின் சமாகமம் என்பது உங்கள் செவிகளில் இடையருது தொனித்துக் கொண்டு இருக்கும். சமாகமம என்பது பலருக்கும் இப்போது ஓர் பழம் பாடம். உங்கள் ஆசிரியர், ஆசிரியைகள் பயிற்சி பெற்று வெளி கொண்ட ஆசிரிய கலாசாலை இருந்து வருகின்ற கொழும்புத் துறையில் அபபோது சற்பிரசாத சமாகமம் எவ்வளவு சிறப்பாக நடந்தது என்பதை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கலாம். அதைப் போலவே மாமரியின் இந்தப் புனிதஆண்டில் மாதாவுக்குத் தோத்திரமாய் மரியாயின் சமாகமம் யாழ்ப்பாணம், அர்ச். பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் வருகிற ஐப்பசிமாதம் பேராக நடந்தேறப்போகிறது. அத்துடன் பெரும் கவர்ச்சிகரமாய் ஞானோபதேசப் பொருட் காட்சி ஒன்றும் நடக்கவிருக்கிறது.

மாதாவின் சமாகமம் சிறப்பாக நடக்க வேணடும் என்று நீங்களும் ஆசைப் படுவீர்கள் தானே. அதனுல் மரியாயின் சமாகம ஆயத்தச் செபத்தைப் பக்தியாகத் தினமும் சொல்லி வருகிறீர்களா? யூபிலிக் காணிக்கையாக ஞானமலர்ச் செண்டு ஆவலுடன் தயார் செய்து வருகிறீர்களா? சின்னப் பிள்ளைகளின் செபத்திலும், ஞான மலர்ச் செண்டுக் காணிக்கையிலும் தான் மாதாவுக்கு அதிகம் விருப்பம் இருக்கும். ஆதலால் இவைகள் மட்டில் அதிகம் ஊக்கங் காட்டி, மாதாவுக்கு மகிழ்ச்சி ஊட்டுங்கள். இன்னும் உங்கள் பாடசாலையில் சமாகமத்துக்காக என்ன ஆயத்தம் நடக்கிறது என்று அண்ணாவுக்கு எழுதுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## கண்டு பிடியுங்கள்

திருச்சபையில் உள்ள சில அர்ச்சியசிட்டர்கள் நெருங்கிய இனபந்துக்கள். அவர்களிலே சிலரின்பெயர்களை இணைத்துத்தந்து முறைகளைக் கண்டு பிடித்துச் சொல்லுங்கள் என்றுகேட்கப் பட்டது. விடைகள் பின்வருமாறு:

1. அர்ச். மொனிக்கம்மாளும், அகுஸ்தீனும் — தாயும் மகனும்.
2. அர்ச். விறிசித்தம்மாளும், கத்தறீனும் — தாயும் மகளும்.
3. அர்ச். கொஸ்மாவும், தமியானும் — சகோதரர்.
4. அர்ச். மார்க்கும், பர்ணபாசும் — மைத்துனர்.
5. அர்ச். ஆசீர்வாதப்பரும், ஸ்கொலாஸ்திக்கம்மாளும் — அண்ணன், தங்கை.
6. அர்ச். பெரியபசிலும், நிஸ்ஸா கிறகோரியாரும் — சகோதரர்.
7. அசிசிப்பதியைச்சேர்ந்த அர்ச். கிளாராவும், அக்கினேசும் — சகோதரிகள்.
8. அர்ச். வலேரியானும், செசிலியாவும் — புருஷனும் மனைவியும்.
9. ஹங்கேரிதேசத்து அர்ச். எலிசபேத்தும, எட்வீசும் — மாமியும் மருகியும்.
10. அர்ச். சுவிசேஷக அருளப்பரும, சந்தியோகுமையோரும்—சகோதரர்.

இவைகளை நீங்கள் அனுப்பிய விடைகளுடன் ஒத்துப்பாருங்கள். 7 தொடக்கம் 10 சரியாகில் அதிஉத்தமம். 4 தொடக்கம் 7 வரை உத்தமம். 3 சரியானுல் அர்ச்சியசிட்டர்களின் சரித்திரப் புத்தகம் ஒன்று நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்.

## முதல் நன்மைப் பாட்டு

இப்போது நாங்கள் பாடசாலையில் ஆங்கிலமும் கற்றுவருகிறோம். அதனுல் அப்பாஷையில் எங்களுக்குக் கொஞ்சம் அறிவு இருக்கத்தானே வேணடும். உங்கள் ஆங்கில, தமிழறிவை நான் ஓர் கால் பரீட்சிக்க எண்ணிச் சின்ன யேசுபேரில் நாண்கண்ட முதல் நன்மைப் பாட்டு ஒன்றைக் கீழே தருகிறேன். சரி, அதனைத் தமிழில் அழகாக ஆக்கித் தாருங்கள். ஆர் இதில் திறமைசாட்டப் போகிறீர்கள் என்று இருந்து தான் பார்க்கப்போகிறேன்.

### First Communion

Little Jesus You love me,
I love Thee.
Little Jesus You are near,
I am here.
Jesus dear, You in me,
I in Thee

— சின்ன அண்ணா.

## பூந் தோட்டம்

'ஜெயம்'

1

அழகே பொழியும் பூந்தோட்டம்
அமலோன் தந்த பூந்தோட்டம்
ஒளியே காலும் பூந்தோட்டம்
உலகிற் காணுப் பூந்தோட்டம்

2

அன்பே வடிவாம் பூந்தோட்டம்
அருளே நிலவும் பூந்தோட்டம்
பொன்போல் அருமைப் பூந்தோட்டம்
புனிதம் தவழும் பூந்தோட்டம்

3

இன்சொல் அங்கே மலராகும்
இரக்கம் மதுரக் கனியாகும்
அன்புக் கதிரோன் ஒளியினிலே
ஆனந் திக்குர் பூந்தோட்டம்

4

ஈனச் செயல்கள் செய்தாலோ
இருளாய் விடுமிப் பூந்தோட்டம்
ஞானச் செயல்கள் நன்மைகளாய்
நன்ருய் மிளிரும் பூந்தோட்டம்

5

பாலா! இந்தப் பூந்தோட்டம்
பரிசுத் தத்தன் பூந்தோட்டம்
மேலாம் உந்தன் இருதயமே
மேன்மை உறவே காத்திடுவாய்

## விடை கூறுங்கள்

1. புத்தி இல்லாதவனை இது என்பர்.
2. இலங்கையில் சிங்களவர் இது உளர்.
3. உடையவனின் உத்தரவின்றிச் சாமான்களைக் கொண்டுபோகிறவனை இது என்பர்.
4. எந்தெந்த நேரத்தில் என்னென்ன வேலையைச் செய்யவேண்டுமோ அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்கிறவன் இது உள்ளவன்.
5. ஒருவன் தனது சீவியத்திலே 50 வருடங்களைக் கண்டுவிட்டால் கொண்டாடும் உற்சவத்தை இது என்பர்.

மேலே காட்டியவற்றின் விடை ஒவ்வொன்றும் நான்கு எழுத்துக்கள் கொண்ட தனித்தனிச் சொற்களாகும். இவைகளைக் கண்டுபிடித்து அவற்றின் மூன்ரும் எழுத்துகளை எல்லாம் எடுத்துச் சேர்த்தால் முதலில்இருந்து வாசித்தாலும், கடைசியில் இருந்து வாசித்தாலும் ஒரே பொருளைத்தரும் நுட்பமான ஓர்சொல்லாகும். அதுயாது?

ஜே. ஸ்ரனிஸ்லாவுஸ் குறேரா,
த. க. பாடசாலை, குடாப்பாடு,
நீர்கொழும்பு.

* * *

1. காற்றடித்தபந்தோ, வெறும்பந்தோ பாரம் கூடியது?
2. சமாதானத்தின் பறவை எது?
3. எல்லா வேகத்திலும் கூடிய வேகம் எது?
4. ஓர் மாதத்தில் எத்தனை முறை பூரண சந்திரனைக் காணலாம்?
5. ரி, து, ரு, த, ய, சி, த, ரு, ப், கா, த, ம்.

இதை நேர்ப்படுத்தினுல் ஒருபழமொழி வரும்.

லா. அமலதாசன் லெம்பேட்,
சந்தானு ஆண்பாடசாலை, வங்காலை.

* * *

நான்கு எழுத்துகள் கொண்ட அர்ச்சியசிட்டவரின் பெயர். இதைக் கண்டுபிடியுங்கள்.

1-ம் எழுத்து பெட்டியில் உண்டு,
தட்டியில் இல்லை.
2-ம் எழுத்து இனத்தில் உண்டு,
இடத்தில் இல்லை.
3-ம் எழுத்து மடியில் உண்டு,
மனதில் இல்லை.
4-ம் எழுத்து சற்குணத்தில் உண்டு,
திர்க்குணத்தில் இல்லை.

இ. யோசப்பிள்ளை, எழுவைதீவு.

* * *

எழுத்துகள் இடம்மாறிய சொற்றொடர்.

“[illegible]யே பிறழ்க”

கன்னி மரியம்மாளுக்கு ஒரு ஸ்துதி இதிலே கரந்து நிற்கின்றது. இதை முறைப்படி ஒழுங்கு படுத்தி அந்த ஸ்துதியைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

— சகரசகாரன்.

## கருணையாருக்கு?

ஓர் அரசன் தனது அரண்மனை உத்தியோகஸ்தன் ஒருவனுக்கு மரணதண்டனை விதித்து. அவனைக் கொல்லும்படி செய்து விட்டான். கொலையுண்ட உத்தியோகஸ்தனின் மகன் ஆத்திரம் கொண்டு, பழிக்குப்பழி வாங்க எண்ணி அரசனுக்கு விரோமாய்ச் சதிசெய்தான். அகப்பட்டுக்கொண்டான். அவனுக்கும் மரணதண்டனை விதித்தான் அரசன்.

தண்டனையை நிறைவேற்றுமுன், அந்த வாலிபனின் தாய் அரசனிடம் ஓடோடியுஞ் சென்ருள்: “கருணை கூர்ந்து என்மகனை மன்னிக்கவேண்டும்” என்று அவனைக் கெஞ்சினுள்.

“தாயே, உன்புருஷனுக்கு மரண தண்டனை விதித்தேன்; அவருக்குக் கருணை காட்ட வேணடுமென்று நீ வந்து கேட்கவில்லை; இப்போது மகனுச்காகப் பரிந்துகொணடு வந்திருக்கிருயே! ஏன் இந்த வித்தியாசம்? என்று அரசன் கேட்டான்.

“என் புருஷனுக்கு யாரும் கருணை காட்டத் தேவையில்லை; அதனுல் தான் நான் வரவில்லை; ஏனெனில், அவர் நிரபராதி; நிரபராதிக்கு நீதி தான்வேண்டும்; குற்றவாளிக்குத்தான் கருணை வேண்டும்; என்மகன் குற்றவாளி; அதனுல்தான் வந்தேன் என்ருள் அந்தப் பெண்மணி.

இந்தப்பெருமையான பதிலைக்கேட்டு அரசன் மனமுருகி விட்டார். வாலிபனுக்கு மன்னிப்பும் அளித்தான்.

— “ஜீவா”

ஜோண்— பீற்றர்! நானும், எனது அக்காவும் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் தெரியுமா? நாங்கள் பிறந்த நாட்களை அரசினர் ஒவ்வோர்வாரமும் விடுமுறை நாட்களாக்கி இருக்கிருர்களே!

பீற்றர்— அடேஅப்பா, நீங்கள்பிறந்த அந்த அதிர்ஷ்டதினங்கள் எவை?

ஜோண்— சனியும், ஞாயிறும்தான்.

— “அல்லேலூயா”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் வந்தவன்

(ஜே. எம்.)

அவன்பணக்காரன். பாண்டித்தியம்பெற்றவன். பரிசேயன். யூதர்களுள் பிரபு. அவர்களின் ஆலோசனைச் சபையில் உன்னதஸ்தானத்தை வகித்தவன். உண்மையைஅறிய ஆவலுடையவன். ஆகவே, யேசுநாதரைத் தனிமையில்கண்டுபேச ஆசைகொண்டான். ஆனால், பரிசேயருக்குப்பயந்து பிறர் அறியாதபடி இரவில் யேசுநாதரைக் காணவந்தான். அவன்பெயர் நிக்கோதேமு.

இரவில்வந்த விருந்தாளியை அன்புடன்வரவேற்று அண்டையில் அமர்த்தினார் நமதுஆண்டவர். அங்கேமங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெளிச்சத்தில் அந்தச்சீமானை உற்றுப் பார்த்தார். கனிவுடன்பேசினார். மனமகிழ்ச்சியுடன் நிக்கோதேமு, "குருவே, நீர் சருவேசுரனிடத்திலிருந்து போதகராய் வந்திருக்கிறீரென்று அறிவோம். ஏனெனில், ஒருவனும் தன்னோடு சர்வேசுரன் இருந்தாலொழிய, நீர்செய்கிற இந்தஅற்புதங்களைச் செய்யமாட்டான்" என்றான் (அரு. 3: 2.)

நேர்மைக்குணமுடைய அப்பரிசேயனுக்குப் பதிலளிக்கும்மேரையாய் யேசுநாதர்: "ஒருவன் சலத்தினாலும், இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபடியும் பிறவாதிருந்தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டானென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். மறுபடியும் பிறக்கவேண்டுமென்பதைக் கேட்டதும் வியப்புற்றான் நிக்கோதேமு. அவன் மனதுக்குள் எழுந்த சந்தேகங்கள் அனைத்தும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வெளிப்பட்டன. யேசுபிரான் அவைகளுக்குப் பதில் அளித்துக்கொண்டே வானுலகைப் பற்றியும், பரமபிதாவைப்பற்றியும் அவனுக்குப் படிப்படியாகப் போதித்தார்.

எங்கேயோ ஓர்சேவல் கூவியது. ஒளிக்குப்பயந்தான் இருளில்வந்தவன். அங்கிருந்து துரிதமாய் விடைபெற்றுக்கொள்ளவே, அவனுக்குக் கடைசிமொழியாகக் கிறீஸ்துநாதர் சொன்னதாவது: "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும், மனிதர் தங்கள்கிரியைகள் கெட்டவைகளாய் இருந்தபடியினாலே, ஒளியைவிட்டு இருளையே விரும்பினார்கள். இதுவே அவர்களுடைய தீர்வைக்குக் காரணம். ஏனெனில், தின்மையைச்செய்கிற எவனும் ஒளியைப்பகைக்கிறான். தன்கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்திலும் வராதிருக்கிறான்." (அரு. 3 : 19-20.)

நிக்கோதேமு இரவில் ஒளியைத் தேடிவந்தான். இருள் பிரியுமுன்னரே வெளியேறினான். ஆனால், திரும்பிப் போகும்பொழுது ஆண்டவருடைய அருளொளியின் ஒருகதிர் அவனுடையஇருதயத்தில் இடம்பெற்றது. கிறீஸ்துநாதர் தேவசுதனென்றும், இரட்சகரென்றும் அவன் நன்குணர்ந்தான். செழிப்பானபூமியில் விசுவாசத்தின்வித்து இடப்பட்டது. ஆனால், விதைமுளைத்துத் தழைத்துப் பூத்துப் பலன்கொடுக்க நாட்படுமன்றோ!

சிலமாதங்கள் கடந்தன. திவ்விய இரட்சகர் தமது பகிரங்கவாழ்வில் வெற்றிகொள்வதைக்கண்டும், "இந்த மனிதனைப்போல ஒருவனும் பேசினதில்லை" என்றுஎல்லோரும் புகழ்வதைக்கேட்டும் சதுசேயரும், பரிசேயரும் ஒன்றுசேர்ந்து அவரைஎதிர்க்கவும், சிறையில்அடைக்கவும் முயன்றனர். அப்பொழுது யேசுநாதரிடத்தில் இரவில்வந்தவனும், (ஆலோசனைச்சங்கத்தில்) ஒருவனுமாகிய நிக்கோதேமு என்பவன் அவர்களைநோக்கி: "ஒரு மனிதனுடைய வாக்குமூலத்தைக்கேட்டு, அவன்செய்கிறது ஏதென்று அறிதற்குமுன்னே நம்முடைய வேதசட்டம் அவனுக்குத் தீர்வையிடுமோ என்றான்" (அரு. 7 : 50-51). இங்ஙனம் யேசுவிற்காகப் பரிந்து பேசினதைத் தவிர அப்போதுஅவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆனால், பெரியவெள்ளிக்கிழமையன்று கல்வாரிமலையில் அதேநிக்கோதேமுவை நாம்பார்க்கிறோம். இப்பொழுது ஒருவருக்கும் பயப்படாமல் திவ்வியஇரட்சகரை அடக்கம் செய்யத் தைரியத்துடன் முன் வருகிறான். அவன் வெள்ளைப்போளமும், கரியபோளமும் கலந்த நூறுஇறாத்தல் பரிமள வர்க்கங்களையும் கொண்டு வந்தான். (அரு. 19 : 39)

பலமாதங்களுக்குமுன் ஓர்இரவில் அடைந்த அருள்ஒளியை வீணாக்காமல் காபபாற்றிப் பயனளிக்கச் செய்தான். ஏனெனில், "சர்வேசுரன் உலகத்தை எவ்வளவாக நேசித்தாரென்றால், தம்முடைய ஏகசுதனைத் தந்து அவர்மேல் விசுவாசமாயிருக்கிற எவனும் சேதமாய்ப் போகாமல் நித்தியசீவனை அடையும்படி அருளியிருக்கிறார்." (அரு. 3: 16).

# வெங்காயம்

சத்துள்ளதும், மிக மலிவுமான பொருள்களில் வெங்காயமும் ஒன்று. இயற்கைப்பொருட்களிலே இரத்த சுத்தியையும், இரத்தவிருத்தியையும் கொடுப்பதில் வெங்காயத்தைப்போன்ற பொருட்கள் வேறுஇல்லை. வெங்காயம் ஆகாரபதார்த்தம் மட்டுமன்று, ஔடதங்களுக்கும் உபயோகப்படுகின்றது. பயிரிடப்படும் நாடுகளுக்குத் தக்கபடி இதன்பருமனிலும், நிறங்களிலும், குணங்களிலும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. பம்பாய், பங்களூர் வெங்காயம் சிலஅம்சங்களில் உயர்ந்ததுஎன்று கருதப்படுகிறது. "நாட்டு வெங்காயம்" என்று சொல்லப்படும் யாழ்ப்பாணச் சிறியவெங்காயம் சில அம்சங்களில் சிறந்ததெனக் கூறப்படுகிறது.

வெங்காயத்தில் பெரும்பாகம் நீரே. இதில் தேகவளர்ச்சிக்கான தாதுப் பொருட்கள் இருக்கின்றன. இதன் சாற்றில் உண்டாகும் ஒருவித வேகமான வாசனைக்குக்காரணம், வெங்காயத்தில் ஆவியாய்ப் போய்விடக்கூடிய ஒருவிதஎண்ணெய் இருப்பதே. அது கந்தகமும், 'ஹைட்ரோகார்ப'னும் கலந்த எண்ணெய். வெங்காயச்சாற்றைக் காய்ச்சினால் கந்தகஆவி கிளம்புவதைக்காணலாம். இதில் கந்தகத்தைத் தவிரப் பிரகாசிதஉப்பு, புளியுப்புமுதலிய பல உப்புச்சத்துக்களும் நிறைந்திருக்கின்றன. மேலும் கொஞ்சம் முட்டைவெண்கருவைஒத்த பதார்த்தமும், சர்க்கரையும், பிசின்நீரும் அடங்கியிருக்கின்றன. 'சி'சத்தப்பொருளும இதில் நிறையஇருக்கின்றது.

வெங்காயத்தின் உணவுப்பயன் ஆதிகாலமுதலே உணரப்பட்டிருக்கிறது. கடுமையாகஉழைப்பவர்களின் ஆகாரத்தில் வெங்காயம் ஒருபாகம் சேரவேண்டியதுஅவசியம் இந்த உண்மையை ஆதிகாலத்தில் ரோமர்கள் தெரிந்துதான் தங்கள் தொழிலாளர்களுக்கும், படையினருக்கும் வெங்காயத்தையும் உணவுடன் ஏதோஒரு வகையில் பதார்த்தம்செய்து தினமும் கொடுத்துவந்தார்கள்எனத் தெரிகிறது. இராணுவவீரர்களுக்கு ஊக்கத்தையும், தைரியத்தையும், உழைப்பாளிகளுக்கு உடல்உறுதியையும் வெங்காயம கொடுக்கவல்லதுஎன்பது இதன் மூலம் தெளிவாகிறது. இப்பொழுதும் உழைப்பாளிகள் வெங்காயத்தை அதிகம்சேர்த்துக்கொள்வதை நாம் காணலாம்.

வெங்காயத்திற்குள்ள ஊட்டமளிக்கும்சக்தியை மேல்நாட்டுவைத்தியர்களும் புகழ்ந்திருக்கின்றனர். சேர் ஜோண் சிங்கிளயர்என்பவர் "ஆரோக்கியவிதியும் நீண்டஆயுளும்" என்னும் நூலில் கூறியிருப்பதாவது: "வெங்காயத்தை உபயோகிப்பதின் அவசியத்தைப்பற்றி எவ்வளவுவேண்டுமானாலும் சொல்ல[illegible] வேறெந்தப் பச்சைக்காய்கறிகளிலும் இல்லையென்று சொல்லலாம். சில வெங்காயங்களையும், ஒருபாண் துண்டையும் உண்டுவிட்டு ஒருவன் வேறுஆகாரம் எதுவுமின்றி இரண்டு நாள்வேலைசெய்யலாம. பிரான்சியர்கள் நீண்டநடனங்களுக்குப்பின் ஆயாசந்தீர்த்துக்கொள்ள வெங்காயச்சூப்பு அருந்துகிறார்கள்."

மருந்துகள்செய்வதற்குப் பலதேசங்களிலும், பலவகையிலும ஆதிகால முதலே வெங்காயத்தை உபயோகித்து வந்திருக்கின்றனர். வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவற்றின் உபயோகத்தை விபரமாகக்கூறாத இந்திய, சீன, அராபிய, எகிப்திய, கிரேக்க வைத்தியநூல்களே இல்லை.

படுக்கைக்குப் போகும்போது ஒரு வெங்காயத்தைத் தின்றுவிட்டு வெந்நீர் பருகினால் எவ்வளவுகடுமையான சலதோஷமும் பறந்துவிடும். தொண்டையிலே உண்டாகும் கரகரப்பிற்கும், எரிச்சலுக்கும் வெங்காயப் பத்துப் போட்டால் நலலகுணம் உடனே கிடைக்கும். வெங்காயச்சாற்றை முகரச்செய்தால் துடித்துக்கொண்டிருப்பவர்கள் அயர்ந்து தூங்கிவிடுவார்கள். தேள்கடி விஷத்தையும் வெங்காயச் சாறு கண்டிக்கும்.

வெங்காயத்தை நறுக்கி வீட்டிலே படுக்கும்இடம், குழந்தைகள விளையாடும்இடம் முதலிய பிரதானஇடங்களிலேவைத்தால் அந்த இடங்களில் விஷசெந்துக்கள் அண்டா. பாம்பு, தேள் முதலிய விஷசெந்துக்களுக்கு வெங்காயத்தின் வாசனையைத் தாங்க முடியாது.

நடுங்கல்சுரத்திற்கு வெங்காயத்தையும், வெள்ளைப்பூண்டையும் உபயோகிக்கலாம். காக்கைவலிப்பு உள்ளவர்களுக்கு நாள்தோறும் ஆகாரத்துடன் வேகவைத்த வெங்காயத்தைக் காலைமாலை இருவேளையும் கொடுத்துவந்தால் அந்நோயின்வேகத்தைக் குறைக்கும்.

திடீரென்று மயக்கம்போட்டு மூச்சுப்பேச்சின்றி அடிக்கடி விழுபவர்களுக்கு வெங்காயச்சாறும், தண்ணீரும் சமபாகம் கலந்துகொடுக்கலாம். நித்திரையின்றி மனக்கலக்கத்தால் கஷ்டப்படுகிறவர்களும் வெங்காயத்தை நெய்விட்டுவதக்கி உண்டுவந்தால் நிம்மதியாகத் தூங்கலாம். பைத்தியத்திற்கு வெங்காயத்தையும், வெள்ளைப் பூண்டையும நாள்தோறும் உணவில் கலந்து கொடுத்துவந்தால் குணம் கிடைக்கும்.

தலைவலி, நரம்புவலிமுதலிய வலிகளுக்கும் வெங்காயத்தை வேகவைத்துச் சாப்பிடலாம். வலியுள்ளஇடத்திலே வெங்காயத்தை அரைத்துத் தடவலாம். கட்டிகள், புண்களை உடைப்பதற்கு வெங்காயத்தை அரைத்துப் பற்றுப்போடலாம்.

குன்மம், அசீரணம் இவற்றிற்கும் வெங்காயம் நல்லது. சீரணசக்தியை அதிகரிக்கச்செய்து, பசியைப்பெருக்கி, வயிற்றிலிருக்கும் மந்தத்தை அதுஓட்டுகிறது. சீரணஉறுப்புகள் பலம்பெருகும்படி செய்கிறது. நெப்போலியனே அசீரணத்தால் கஷ்டப்பட்ட காலங்களில் வெங்காயத்தையே சிறந்தஔடதமாகக் கொண்டிருந்தான்.

பல்வலியால் சிரமப்படுபவர்கள் வெங்காயச்சாற்றால் வாய்கொப்பளிக்கலாம். வாய்ப்புண், ஈறுவலி முதலியவற்றிற்கும் இது மிகவும்நல்லது. கீல்வாதத்தால் துன்பப்படுபவர்களும் தினசரி இதைச்சாப்பிட்டுவந்தால் மிகவும் ஆச்சரியப்படும்விதத்தில் பயனடைந்து அந்நோயினின்று விடுதலையடைவார்கள். சிடன்காம், பார்த்தோலின், கல்லண்ட் என்ற பிரபல மேனாட்டுவைத்தியர்கள் வெங்காயத்தின் உதவியால் சோகை, மகோதரம், வீக்கம் முதலியவற்றைப் போக்கலாம்என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். மூத்திராசய, குண்டிக்காய் சம்பந்தமான வியாதிகளைத் தீர்ப்பதிலும் வெங்காயம் மிகவும்பயன்படுகிறது [illegible]நூல் கூறியிருக்கிறார்.

போதியஅளவு காய்கறிப்பதார்த்தங்கள் சேர்த்துக்கொள்ளாததால் உண்டாகும் சொறிகரப்பானுக்கு இது நல்லது. 'சி' விற்றமினும், உலோக உப்புக்களும் உடம்பில் போதியஅளவு சேராவிட்டால் ஈரலில் ஒருவித பசை ஏற்பட்டுப் படர்ந்திருக்கும். பற்கள் அசைவுகொடுக்கும். அதனால் துர்நாற்றம் உண்டாகும. இந்த வியாதிகள் வெங்காயம் வழக்கமாகச் சேர்த்துவந்தால் கிட்டவேநெருங்கா. ஏனென்றால், வெங்காயத்தில் போதிய உலோக உப்புரசத்துகளும், 'சி' விற்றமினும் இருக்கின்றன.

மூலஉபத்திரவம் உள்ளவர்கள் வெங்காயத்தை நறுக்கிப்போட்டுத தயிருடன்கலந்து சாப்பிடலாம், அல்லது பாசிப்பருப்புடன் புளியில்லாக் கூட்டுச் செய்து சாப்பிட்டால் உபத்திரவம் மட்டுப்படும் காதுவலிக்கு வெங்காயச் சாற்றைக் காதிற்பிழியலாம்.

தலைமயிர் வளர்ச்சிக்கும், நரைமயிரைப்போக்கிக் கறுப்பாக்கிக் கூந்தலை வளரச்செய்வதற்கும வெங்காயத்தின் சாற்றைத் தேனுடன்கலந்து தலையில் தடவி வாரிவிட்டுக்கொண்டு குளிப்பது நல்லது. இவ்விதம் நோய்களைநீக்கி, நல்ல தேகஆரோக்கியத்தையும், ஊட்டத்தையும் அளிக்கிறது வெங்காயம்.

## ஸ்ரீமதி மரியம்மாள் மஸ்கறேனஸ் அவர்களின்

# தேகவியோகம்

தமதுஅருமையான கட்டுரைகள், கவிதைகளாலே கத்தோலிக்க பத்திரிகைகளைப் பரிமளிக்கச்செய்து வந்தவரும், சிறந்த கவிஞருமான பண்டிதர் எம். பி. மஸ்கறேனஸ் அவர்களின் பாரியாரான ஸ்ரீமதி மரியம்மாள் மஸ்கறேனஸ் அவர்கள் தூத்துக்குடியிலுள்ள தமது இல்லத்திலே சென்ற 9-8-54 திங்கட்கிழமை காலஞ்சென்ற துயரசெய்தியை அறிய வந்து மனமவருந்துலானோம். மரிக்கும்போது இவருக்குவயது 71. இவர் மரணிக்க மூன்று தினங்களின் முன் பூரண அறிவுடன் அந்தியதேவதிரவியானுமானங்களைப் பெற்றுத் தமது ஏகபுத்ல்வியான சங். சில்றா பெல்லார்மின் மேரியவர்கள் கடைசிச்செபங்கள் சொல்லிநிற்க, தமதுகுருபுதல்வர் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, மரணத்திலையில மறைபலாயினர். இவரின் பிரேதசேமமானதுபெருந்திரளானோர் சமுகமளிக்கச் சிறப்பாகநடந்தேறியது. அதிவண. பெனடிற் பெர்னாண்டோ சுவாமியாரும், அதிவண. எஸ். எம். தல்மீடியாசுவாமியாரும் துணைபுரிய, வண. மஸ்கறேனஸ்சுவாமியார் இல்லத்தில் அந்திமதிருச்சடங்குகள் நிறைவேற்றியதும் பிரேதமானது பரிசுத்த பனிமயத்தாயின் ஆலயங் கொண்டு சென்று உயர்மேடை மீது வைக்கப்பட்டதும் அதிவண. பெனடிற் பெர்னாண்டோ, வண. சூசைநாதர் எனும் குரவர்கள் இருவரும் தியாக்கோன், உபதியாக்கோனகத் துணைபுரிய, வண. மஸ்கறேனஸ் சுவாமியாரால் தக்கப்பாடற்பூசை நிறைவேறியது. அத்தருணம் அதிவண. எஸ். எம். தல்மீடியா சுவாமியார் செய்தபிரசங்கத்தில்,காலஞ்சென்றவரின் ஆடம்பரமற்ற, ஆனல், ஆழ்ந்த ஞானவாழ்க்கையைப் பற்றிப் பெரிதும் அருட்சிக்குரியவிதமாய் எடுத்துக்கூறினார். அதன்மேல் பிரேதமானது நகரசபைப் பொதுச் சேமக்காலை கொண்டுசென்று சுவாமியவர்கள்தானே வண. மஸ்கறேனஸ், வண.ஜே.எம்.நிக்கலாஸ்எனும் குரவர்கள் துணைபுரியக் கடைசிஆசீர்வாதம்கூறியதும் சேமச்சடங்கு நடந்தேறியது. இவரைஇழந்து துன்புறும் நாயகரோடும், ஸ்ரீ ரம்போலா மஸ்கறேனஸ் முதலாம் புதல்வர்கள் புதல்வியோடும், மற்றேனையோரோடும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14-ம் வருட

## மரணஞாபகம்

மிருசுவில்வாசரான திரு. எஸ். என். சாமுவேலஅவர்களின் புத்திரி திருமதி

மேரி பிலோமினு இராசாத்தி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22-6-1927 | 29-8-1940 |

ஈரேழு ஆண்டுகளாய் மகளே உந்தன்
இன்முகமும் புன்னகையும் எங்கே எங்கே
நீராக நம்முதிரம் நலமேற் சிந்தி
நின்மடிவால் மாளுகின்ருேம் அந்தோ அந்தோ
சீராட்டி நாம்வளர்த்துக் காத்தோம அன்ருே [ஏனே
செய்கைபெலாம் நீமறந்த தேனே
தீராபோ நம்துயரம தேனே எங்கள்
தெவிட்டாத கற்கனியின் சாறே அம்மா
பெற்றேர்

### யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

**பிரவேச பாலபண்டித, பண்டிதபரீட்சைகள்.**

இவ்வாண்டு சங்கம்நடத்தும் பரீட்சைகள் முன்னர் அறிவித்தபடி ஆகஸ்டு மாதக் கடைசி வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற மாட்டா. செப்டம்பர்மாதக் கடைசி வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் (23, 24, 25-9-54) நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றத்தகுதியான (விண்ணப்பம்செய்த) பரீட்சார்த்திகளுக்கு உரியகாலத்தில் பிரவேசச் சீட்டும், நேரசூசியும் அனுப்பப்படும்.

## தேவ அன்னையின் மகோற்சவம்

மட்டக்களப்பு அர்ச். மரியநாயகி ஆலயத்தில் இந்தமகோற்சவ ஆரம்ப விழாக்கள் 1-8-54-இல் கட்டளைக்குரவர் வண. ரி. ஆறண்ட்ஸ் சுவாமியவர்களால் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாயின. 14-8-54 சனிவாரம் மாலை 6-30 மணிக்கு இருமருங்கும் கிறீஸ்தவர்கள் அணிவகுத்துச்செல்ல, அழகுற அமைக்கப்பட்ட வாகனத்தில் மாதாவீற்றிருக்க, வண. அன்ரனி ரோபட் சுவாமியவர்கள் ஒலிபரப்பியின் துணையோடு செபமாலைசெபிக்க, திருச்சுரூபஊர்வலம் ஆரம்பமாயிற்று. இம்முறையில் நீண்டபிரயாணமும், தெருக்களை அலங்கரிப்பதில் பிறமதத்தினர் கொண்டஆர்வமும் கவனிக்கத்தக்கனவாகும். ஊர்வலம் முடிவானதும் வண. ரோபட் சுவாமியவர்களால் "அவவுடைய மகிமைப்பிரதாபமுள்ள மோட்சாரோபணம்" என்னும்விஷயம்பற்றி அரியதோர்பிரசங்கம் செய்யப்பட்டது.

விக்கார்ஜெனறல் அதிவண. வெண்டன்புஜ் சுவாமியவர்களும், வண. ஆறண்ட்ஸ், வண. ரோபட்எனும் குரவர்களும் மாலைஆராதனை பாடினூர்கள். மறுநாட்காலை வண. கட்டளைக்குரவரால் திருநாட்பாடற்பூசை நிறைவேறியது. ஈற்றில் அன்னதானம் வழங்கப்பட்டு மகோற்சவம் இனிதேமுடிபெய்தியது. "கன்னிகையுந் தாயுமான மரியாயின்நாமம் ஸ்துதிக்கப்படுவதாக"

—எஸ். ஜே அன்ரனி

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினூலும், பரிசுத்த சதாசகாய மாதாவின் உதவியினூலும், அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினூலும் என் மன்ருட்டுகள் அனுகூலமானபடியால் என்நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

Naranthanai S. A. N.

## அறிவுச் சுடர்

1. ஈக்கள் விரும்பாத வெளிச்சங்கள் எவை?

சிவப்பு, மஞ்சள் வெளிச்சங்களே. இந்த நிறங்களுள்ள கண்ணுடிகளைச் சன்னற்கதவுகளிற் பதித்தால ஈக்கள் அணுகுவதில்லை. உணவுச்சாலைகளிலும், அவைபோன்ற இடங்களிலும் நடத்திய பரிசோதனையைக் கொண்டு இது கண்டறியப்பட்டிருக்கிறது.

2. ஒருமாதத்தில் மனிதகைவிரல்களிலுள்ளநகங்கள் எத்தனை அங்குலம் வளர்கின்றது?

பதித்திலொரு அங்குலம் வளர்கின்றது.

3 பரிசுத்தஸ்தானம் என்பது எதைக் குறிக்கும்?

ரோமாபுரி மேற்றிராசனத்தைக் குறிக்கும்.

4. இந்தியாவில் எத்தனைமொழிகள் வழங்குகின்றன?

179 மொழிகளும், 544கிளைமொழிகளும வழங்குகின்றனஎன்று கணக்கிடப்பட்டுள்ளது.

5. கடலில்வாழும மச்சஇனங்களில் மிகப்பயங்கரமானவைகள் எவை?

(1) சுறுமீன்கள். இவைகள் மனிதமாமிசத்தின்னும். (2) திருக்கைமீன்கள். (3) அரிவாள்மீன்கள். மரம் அரியும் வாள்போன்ற இவற்றின்மூக்கு ஆறு அடிநீளமுடையன.

6. சமீபத்தில் லிசியேபதியில் அபிஷேகஞ்செய்யப்பெற்ற அர்ச். தெரேசம்மாளின் பஸிலிக்காஎனப்படும் மகாலயம் கத்தோலிக்க உலகமுழுவதுக்குமே சொந்தமானதென்று உரிமை பாராட்டப்படுகிறது. அதற்குக் காரணம்என்ன?

அதைக்கட்டியெழுப்பக் கத்தோலிக்க உலகமுழுவதுமே பணஞ்சேகரித்து உதவியமையேயாகும்.

7. அர்ச். தெரேசம்மாளின் மகாலயம் எத்தனை சின்னக்கோவில்களையும், எத்தனைபலிபீடங்களையும் அடக்கியுள்ளது?

19 சின்னக்கோவில்களையும், மகாலய பெரியபலிபீடமும், சின்னக்கோவில்களின 19 பலிபீடங்களும்உட்பட 20பலிபீடங்களையும் அடக்கியுள்ளது.

8. யேசுசபையைச்சேர்ந்த வண. அகஸ்ரீனே பியாசுவாமியார் ஒவ்வோர் சனிக்கிழமையும் வத்திக்கான்சென்று திரும்புகின்ருர். ஏன்?

பாப்பரசரிடமும், அங்குள்ளமற்றும் சிலரிடமும் பாவசங்கீர்த்தனம் கேட்பதற்கேயாகும்.

9. தங்கத்தால் அத்திவாரமிட்டுத் தனது கோட்டை மாளிகைவாயிற் பெரியகதவை நிறுத்திய இந்தியமகாராஜா யார்?

பெடாரின்மகாராஜாவே. இந்த மாளிகைக்கோட்டை புரண்டார்என்னுமிடத்திலுள்ளது. இந்த மகாராஜா 1920-மஆண்டு தான்கண்ட ஓர்கனவின்பலனுகத் தனதுமாளிகைக்கோட்டையின் பாரியவாயிற்கதவை 50,000 சுத்ததங்கச் செங்கற்கள்மேல் நிறுத்தி வைத்தார். இந்தமகாராஜா அந்தத் தங்கம்முழுவதையும் 3⅓ வட்டிவிகிதத்தில் ஏதாவதொன்றில் பணமுதலீடு செய்திருந்தால் இன்று அதன்பெறுமதி 28,00,00,00,00,000 (2 லட்சத்து 80 ஆயிரகோடி) டலாகப் பெருகியிருக்கும்.

10. பாடசாலைமாணவர்களின் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டர் யார்?

சமீபத்திலே அர்ச்சியசிஷ்டபட்டம் சூடிய அர்ச். தொமினிக் சவியோ.

11. உலகின்தற்போதைய அபாயகரமானநிலைமை எவ்வளவுகாலம் நீடித்திருக்குமாம்?

40 வருடம் நீடித்திருக்குமென்று அமெரிக்க ஜனுதிபதி ஐஸன்ஹாவர் அவர்கள் கூறுகின்ருர்.

## பரலோக இராக்கினியின் மகோற்சவம்

போளவத்தைக் கோயிற்திருநாளான மோட்சாரோபண இராக்கினியின் மகோற்சவம் கடந்த 15-ந் திகதி மங்களகரமாக நடந்தேறியது. வேஸ்பர் சம்பந்தமாகப் பொறுப்பேற்கும போளவத்தை ஆசிரியர்குழாம இப்புனித ஆண்டிலே அமலோற்பவியின் நூற்றுண்டுவிழாவின்பேரால் அதிகம் பக்திச்சிறப்பாக மாலைஆராதனையை நடத்தியது. கோயிலோ பரலோகஇராக்கினிக்கேற்ற புனிததலம் என்னுமாறு துலங்கியது. 14-ம திகதிமாலை பெருந்திரளானமக்கள் சமுகமளித்துநிற்கப் 12குருமாருடன் அதிவண. பேசில் பொன்சேகா சுவாமியாரால் மாலை ஆராதனை பாடப்பட்டது. வண ஏ. பி. சந்தனம்சுவாமியார் தமிழில்இனியதோர் பிரசங்கம் நிகழ்த்தினர். கட்டளைக்குரவர் அதிவண. யு. கிளமென்ற் சுவாமியார் தமது அபூர்வமான இசைக்கருவியைக் கைவன்மைதோன்ற வாசிக்க, அவரால்பயிற்றப்பட்ட பாடகர்குழாம்பாடிய கீதங்களைக்கேட்டோர் மனம பக்திப்பரவசம்கொள்ளலாயிற்று. திருநாளன்று காலை மூன்று தனிப் பூசைகளும், 8-30 மணிக்கு வண ஓ. பி. சந்தனம்சுவாமியாரும், வண. பிக்கோ சுவாமியாரும உதவிசெய்ய அதிவண. ஆர்தர் மாட்டின் சுவாமியாரால் பாடற்பூசையும் நிறைவேறின. அவ்வமயம் வண. சந்தனம்சுவாமியாரும், வண. எல். திசேராசுவாமியாரும் இரு பிரசங்கங்கள் நிகழ்த்தினர். மாலை மூன்றுமணியளவில் மாதாவின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் முடிந்ததும் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்தோடு திருநாள் இனிதே சமாப்தமாயது.

— நிருபர்

## நாளு சங்கதிகள்

● இந்தியாவின் உலகப்பிரசித்திபெற்ற "தாஜ்மகா"லின் சரிதையைச் சினிமாப்படமாகப் பிடித்த உலகத்திக்குக்காட்டச் சேர் அலெக்சாண்டர்கோர்டா என்பவர்சமீபத்திலே இந்தியாவுக்கு வரவிருக்கின்ருர். இந்தப்படம் அமெரிக்க தனவந்தர்சிலரின் முதலீடு கொண்டு பிடிக்கப்படவிருக்கின்றது.

● துருக்கிக்கு 31,600 தொன் நிறைகொண்டனவும், 1கோடியே 97 லட்சம் டலர் பெறுமதியுடையனவுமான ஐந்துபிரயாணக்கப்பல்களைக் கட்டிக்கொடுக்க யப்பான் இசைந்திருக்கிறது. இந்தக் கப்பல்களில் 7,700 தொன் நிறைகொண்ட இருபிரயாணக்கப்பல்களும், 5,400 தொன் நிறைகொண்ட மூன்று பிரயாணக்கப்பல்களும் அடங்கும்.

● சாமான்பெட்டிகளைத் திறவாமலே அவற்றினுள் இருப்பவைகளைக் காண்பிக்கக்கூடிய இரண்டியந்திரசாதனங்களை நியூயோக்துறைமுக அதிகாரிகள் கடந்த ஆறுமாதங்களாகப் பிரயோகித்துவருகின்ருர்கள். அவற்றின் மூலமாக இதுவரை களவிலேகொண்டுவரப்பட்ட இரண்டுலட்சம்பவுண்பெறுமதியான வைரக்கற்களை அவைகள் காட்டிக்கொடுத்திருக்கின்றன. இந்தக் கற்களின்நிறை 2,000 கற்றூகும்.

● சோவியற்ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஜேர்மனியில் சமீபத்திலே வெள்ளப்பிரவாகம் ஏற்பட்டுச் சனங்கள் பெருங்கஷ்டத்துக்குள்ளானபோது அமெரிக்கஅரசு அவர்களுக்கு உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்க முன்வந்தது. அவற்றைக் கிழக்குஜேர்மனிய கம்யூனிஸ்தஅரசாங்கம் ஏற்றிருப்பதானது பெரும்வியப்பை உண்டு பண்ணியிருக்கின்றது.

### ரேசாப்பூப் படுக்கைஅல்ல

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் முன்னுள்பிரதிநிதியான திரு. எச். டபிள்யு அமரசூரியஅவர்கள் எல்பிட்டியைச்சேர்ந்த வெலம்பகாலைப் புத்த பாடசாலைப்பரிசளிப்புவிழாவில் பேசியபோது: "ஓர்ரோசாப்பூப் படுக்கையில் தான் நானதுயில்கொள்வதாகச் சில சனங்கள்எண்ணுகின்ருர்கள்; ஆனுல், கருமம் அப்படியல்ல; நான்சம்பாதிக்கும்ஒவ்வோர்ரூபாவுக்கும வருமானவரியாக 85சதம கொடுக்கவேண்டியவனுயிருக்கிறேன்; வருமானவரிமூலம் அரசாங்கம் பெற்றபணத்தைப் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் போன்றவற்றிற்குச் செய்யுஞ்சேவைகள்வழியாகச் சனங்களுக்குத் திருப்பக்கொடுக்கின்றது; பணக்காரர் தங்கள்செல்வம் முழுவதையும் ஒரேமுறையில் வறியவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றகொள்கை எடுத்துக்கூறப்படுகிறது; அவ்விதம்செய்யப்படுமானுல், ஓரேயொருமுறைமாத்திரம் வறியவர்களுக்குக் கொடுக்கமுடியும்; காள் மாக்ஸ் பிழைசெய்ததும், தவறிழைத்ததும் இதில்தான்; எக்காலத்தும் செல்வம் பகிர்ந்துகொடுபடக்கூடிய ஒரு திட்டம்தான் நாம்விரும்புவது; நாட்டின் பொருளாதாரநிலைமைகளை உயர்த்துவதாலே இதைச்செய்யமுடியும்" எனக்கூறிநின்ருர்.

### மருதமடுத் திருப்பதி யாத்திரை

மரியாயின் புனிதவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலே மரியாயின் சேனை, அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்ரும்சபை, அர்ச். சூசையப்பர் கூட்டம் ஆதியவற்றின் அங்கத்தவர்களான 130 பேர் வண. ஏ மைக்கேல்சாமி சுவாமியவர்கள் தலைமையிலே நாளைவெள்ளிக்கிழமை மாலை றெயின்மார்க்கமாக மருதமடுத்திருப்பதிக்கு யாத்திரை செய்யவிருக்கின்ருர்கள். இவர்கள் தங்கள்யாத்திரையை முடித்துக்கொண்டு வருகிறதிங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்குத் திருப்புவார்கள்.


## முத்தித்திறவுகோல்

எம்மிடத்தில் தற்போது விற்பனைக்குத் தயாராகிவிட்டது. தேவையானேர் மேல்வரும் விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

| விலை பிரதி: | ரூ. ச. |
|---|---|
| தோற் கட்டு: | 3—50 |
| கலிக்கோக் கட்டு: | 2—50 |

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி (Order Nisi) | |
| இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்

● கம்யூனிஸ்தஆட்சியில் இருந்துவருகின்ற செக்கோசிலவாக்கியாவிலே வருங்காலத்தில் குருமார் தாங்கள் செய்யவிருக்கும் பிரசங்கங்களைத் தணிக்கைசெய்யப்படுமாறு அனுப்பிவைக்கவேண்டுமென்று அரசியற் பொலிசால் கட்டளைபிறப்பிக்கப்பட்டிருக்கிருர்கள். பிந்தஅப்பிரசங்கங்கள் செய்யப்படும்போது அப்பிரதிகளுடனும் ஒப்பிட்டுப்பார்க்கப்படுமாம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 26-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org